# உதயன்

சுடர் : 36 கதிர் : 222 | செவ்வாய்க்கிழமை | ஆனி 22 ஆம் நாள் 06 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## ஒன்லைனில் மட்டுமே ஏ.எல். பரீட்சை விண்ணப்பம்

கொழும்பு, ஜூலை 6

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து அரச மற்றும் தனியார் பாடசாலை விண்ணப்பதாரிகளின் விண்

19 ➤

# வேகமாக பரவுகிறது 'டெல்டா' பெரும் நெருக்கடிக்குள் நாடு

### மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 6

இலங்கையில் பல்வேறு மாவட்டங்களில் 'டெல்டா' கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது நாடு மிகப்பெரிய அச்சுறுத்தல் நிலையில் உள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

19 ➤

## சாவு 32 தொற்று 816

கொழும்பு, ஜூலை 6

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 32 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. அதன்படி நாட்டில் கொரோ

19 ➤

## 9,462 பேருக்கு நேற்று தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாண மாவட்டத்தில் 9 ஆயிரத்து 462 பேர் தடுப்பூசியை முதற் கட்டமாக நேற்றுப் பெற்றுள்ள

19 ➤

## அரச மருத்துவ சங்கத்தினருடன் முட்டிமோதும் இராணுவத் தளபதி

கொழும்பு, ஜூலை 6

"அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் இராணுவத்தினர் மீது முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. அதனை முழுமையாக நிராகரிக்கின்றோம்." என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவ

19 ➤

## 'கெட் அவுட்' சொன்னது மொட்டு 'குட்பாய்' சொல்வாரா தயாசிறி?



கொழும்பு, ஜூலை 6

"அரசின் தீர்மானங்களை ஏற்கமுடியாவிட்டால், இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர அரசிலிருந்து வெளியேறுவதே சிறந்தது." என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதான பங்காளிக்கட்சி அல்லவெனவும்

19 ➤



அரசுக்குள் உக்கிரமடையும் மோதல்:

## பஸிலை தனியே சந்தித்துப் பேச பங்காளிக் கட்சியினர் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 6

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுக்கும், அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் தனிப்பட்ட முறை

19 ➤

## அந்நிய செலாவணி காலி திண்டாடுகின்றது அரசு

### முன்னாள் பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

அரசின் மெய்யான பிரச்சினை அந்நிய செலாவணி கையிருப்பு இன்மையே என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அரசுக்குள்ள பிரதான பிரச்சினை உரத்தில் இரசாயனம் கலந்திருப்பதல்ல, உண்மையில் வெளிநாட்டு செலாவணி கையிருப்பில் இல்லாமல் போனமையாகும் என அவர் சுட்டிக்

19 ➤

## அக்கிராசனின் மாலையை பறித்துப்பிய்த்த படைகள்!

### அக்கராயனில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி அக்கராயனை ஆண்ட குறுநில மன்னன் அக்கிராசனுக்கு அஞ்சலிசெலுத்த முற்பட்டவர்களிடமிருந்து பாதுகாப்புத் தரப்பினர் மாலையை பறித்து பிய்த்து எறிந்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

15 ➤

## சம்பிரதாயங்களை மீறி வீடுகள் கட்ட அடிக்கல்

(விரிவு பக்கம் 05)

## கடன்பணத்தை கேட்டவர்மீது கொலைவெறித் தாக்குதல்

### கோண்டாவிலில் தந்தையும் மகனும் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 6

கடன் பணத்தைக்கேட்டு வீடு தேடிச் சென்றவர் மீது, வீட்டிலிருந்தவர்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்தி கழுத்தில் குத்தியதோடு, தலையிலும் அடித்து குருதிக் காயம் ஏற்படுத்தியுள்ளனர் என்று குற்றம்

18 ➤

# அரச எதிர்ப்பை உடைக்க நாம் ஒன்றுபடுவது அவசியம்!

### ஆண்டவர் மேல் பழிபோடமுடியாதென்று செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 6

எமது இனத்தை அழிக்க நினைக்கின்ற அரசுக்கு, நாம் ஒரு பலமான சக்தியாக நின்றுநிலைக்க வேண்டும். அதற்காக அனைவரும் ஒற்றுமையாக ஓரணியில் திரளவேண்டும், ஓரணியில் திரளுங்கள். ஒற்றுமையை உருவாக்கி, ஸ்ரீலங்கா அரசின் எதிர்ப்பை நாங்கள் தடுக்க வேண்டும். எங்களுடைய இனத்துக்காக எந்த விலையை

18 ➤

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் துறையினர் போர்; தடுப்பூசி ஏற்றுவதில் தாமதம்

## சாவகச்சேரி மக்கள் ஆதங்கம்

**சாவகச்சேரி, ஜூலை 6**

**கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுவரும் நிலையில் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப நல சேவையாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதால் தடுப்பூசி ஏற்றும் பணிகள் தாமதமடைகின்றன என்று பொது மக்கள் தெரிவித்தனர்.**

இந்த உத்தியோகத்தர்கள் தொழிற் சங்க நடவடிக்கையாக பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டு வருவதால் நேற்று கைதடி, கொடிகாமம், வரணி ஆகிய மருத்துவமனைகளில் தடுப்பூசி ஏற்றப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான சைனோபார்ம் தடுப்பூசி நேற்று சாவகச்சேரியிலும், கைதடி சாந்தி நிலையத்திலும் படையினரின் உதவியுடன் முதியவர்களுக்கு ஏற்றப்பட்டது.

எனினும், ஏற்கனவே திட்டமிட்டவாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், கைதடி, கொடிகாமம் மற்றும் வரணி மருத்துவமனை ஆகிய இடங்களில் குறிப்பிட்ட தினங்களில் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் மற்றும் வரணி ஆகிய மருத்துவமனைகளில் இன்று, நாளை, எதிர்வரும் 9ஆம் திகதி ஆகிய தினங்களிலும், கைதடி மருத்துவமனையில் இன்றும் எதிர்வரும் 8ஆம் திகதியும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-9)

# பாடசாலைகளை ஆரம்பிக்க இன்னமும் தீர்மானமில்லை



கொழும்பு, ஜூலை 6

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் மேலதிக வகுப்புக்களை ஆரம்பிப்பது தொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

விசேடமாக பாடசாலைகளைத் திறப்பதற்கு முன்னர் ஆசிரியர்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். பல்கலைக்கழக ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# 2ஆம் கட்டத் தடுப்பூசி பெறத்தவறியோரும் நேற்று தடுப்பூசியை பெற அலைமோதினர்!

## சாவகச்சேரியில் இந்த நிலை

சாவகச்சேரி ஜூலை 6

முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றி இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றாதவர்கள் தடுப்பூசி ஏற்றிக் கொள்ள எதிர்வரும் பத்தாம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டதையடுத்து நேற்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு பலர் வருகை தந்தனர்.

தற்போது 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் அரச திணைக்கள முன்னரங்கப் பணிகளில் ஈடுபடுவோருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதால் இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்ற வந்த பலர் திருப்பி அனுப்பப்பட்டனர். இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றும் திகதி அறிவிக்கப்படுமெனக் கூறியதால் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாமல் அவர்கள் வீடு திரும்பினர்.

கடந்த 28ஆம் திகதி தொடக்கம் ஜூலை 2ஆம் திகதி வரை இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களுக்கு ஜூலை மூன்றாம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. இருப்பினும் பிரதேசத்தில் முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றிய 480 பேர் இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றவில்லை.

முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றி இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றாதவர்களுக்கு டெல்டா வைரஸ் தாக்கும் அபாயம் உள்ளதென சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் பலர் நேற்று இரண்டாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றறிக்கொள்வதற்காக வந்தபோதும், திருப்பி அனுப்பப்பட்டனர். (ப-9)



# முதியோருக்குத் தடுப்பூசி கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூலை 6

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் கிளிநொச்சியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.


இரணைமடு சாந்தபுரம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ மருத்துவமனையில் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி. ரணசிங்கவின் கோரிக்கைக்கு அமைவாக, இன்றும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் ஏற்பாட்டில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் அழைத்து வரப்பட்டு, தடுப்பூசி ஏற்றப்படுகின்றது. (ம-4,113)

# அலாவுதீனின் அற்புத விளக்கு

## பஸிலுக்கு புகழாரம்



கொழும்பு, ஜூலை 6

அலாவுதீனின் அற்புத விளக்குப் போன்றே பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகையை ஆளுங்கட்சி பார்க்கின்றது என்று அமைச்சர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதால் ஏற்படவுள்ள மாற்றம் என்ன, அவர் என்ன அலாவுதீனின் அற்புத விளக்குடனா வருகின்றார் என்று எதிரணி உறுப்பினர்கள் விமர்சனம் செய்கின்றனர். எம்மைப் பொறுத்தவரையில் பஸில் ராஜபக்சவின் வருகையை நாம் அலாவுதீனின் அற்புத விளக்காகவே பார்க்கின்றோம். அவர் நாடாளுமன்றம் வந்து, அமைச்சுப் பதவியை ஏற்பது எமக்குப் பெரும் பலமாக அமையும். எனவே, பஸிலின் வருகையைத் தடுக்கவே எதிரணி இப்படியெல்லாம் விமர்சனங்களை முன்வைக்கின்றது - என்றார். (ம-4,44)

## பருத்தித்துறையில்

# எழுமாற்றுச்சோதனையில் 12 பேருக்குக் கொரோனா



யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். பருத்தித்துறையில் நடத்தப்பட்ட எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனையில் 5 மீனவர்கள் மற்றும் 5 வியாபாரிகள் உட்பட 12 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 5 பேரும், மந்திகை சந்தைப் பகுதி வர்த்தக நிலையங்களின் வெதுப்பக உரிமையாளர், பழக்கடை உரிமையாளர் உட்பட்ட ஐந்து வியாபாரிகளுக்கும், வெளிநாடுகளிலிருந்து திரும்பியவர்களின் பிள்ளைகள் இருவருக்குமே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என பருத்தித்துறை சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ப)

# வீடு கையளிப்பு

கிளிநொச்சி, ஜூலை 6

இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட 20 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டை, பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி இராணுவ கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி.ரணசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக 57ஆவது படைப்பிரிவால் குறித்த வீடு புதிதாக அமைக்கப்பட்டது. கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிருஸ்ணபுரம் பகுதியைச் சேர்ந்த கூலித்தொழிலாளி குடும்பம் ஒன்றுக்கே இந்த வீடு அமைத்து வழங்கப்பட்டது. தொடர்ந்து குடும்பத்தினருக்கான உலருணவு பொதிகளும், அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. (ஜ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தாயகத்தை விட்டு சீனா வெளியேற வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

**வவுனியா, ஜூலை 6**

**தமிழர் தாயகத்தை விட்டு சீனா உடனடியாக வெளியேற வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.**



காணாமல் ஆக்கப்பட்டோரின் வவுனியாவைச் சேர்ந்த உறவுகளால் மேற்கொள்ளப்படும் போராட்டம் நேற்று ஆயிரத்து 600ஆவது நாளை எட்டிய நிலையில், அதை முன்னிட்டு அவர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தினர். இதன் போதே அவர்கள் சீன வெளியேற்றம் தொடர்பாகத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்:

சீனா தமிழர் தாயகத்தை விட்டு வெளியேற வேண்டும். தமிழர்கள் கடந்த 74 ஆண்டுகளாக அரசியல் தீர்வுகளைக் கேட்டு வருகின்றனர்.

2009ஆம் ஆண்டு போரின் போது, ஒரு லட்சத்து 46 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்களான நாங்கள், பொறுப்பு மற்றும் நீதியைக் காண கடந்த ஆயிரத்து 600 நாள்களாக ஒரு நாளைக்கு ஒரு நேர உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்.

ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் தமிழர்களுக்கான நீதியை சீனா எதிர்ப்பதால், சீனா தமிழர்களின் நண்பன் அல்ல. எனவே, காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்களான நாங்கள் சீனாவை தமிழர் தாயகத்தை விட்டு வெளியேறச் சொல்கிறோம்.

எனவே, மனித உரிமைகளில் அக்கறை கொண்ட அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இலங்கையில் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்த தாமதிக்காமல் செயற்பட வேண்டும் - என்றனர். (ப-110)

# சாவ. நகரசபையினது காணியில் இரவு பகலாக மணல் கொள்ளை

## மக்கள் கவலை

சாவகச்சேரி, ஜூலை 6

சாவகச்சேரி நகரசபையால் நுணாவில் மேற்குப் பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்க கொள்வனவு செய்யப்பட்ட காணியில் கடந்த வாரம் இனந்தெரியாதோர் பெருமளவு மணலை அகழ்ந்து வாகனங்களில் ஏற்றிச்சென்றுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நுணாவில் மேற்கு பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்கவென சாவகச்சேரி நகரசபையால் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் சனி மற்றும் ஞாயிறு ஆகிய விடுமுறை தினங்களில் பெருமளவான மணல் வாகனங்களில் ஏற்றிச்செல்லப்படுகின்றது. இது தொடர்பாக நகரசபை உபதவிசாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. சிறுவர் பூங்கா அமைக்கவென சாவகச்சேரி நகர சபையால் காணி கொள்வனவுசெய்யப்பட்டு, பூங்கா அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் இடம்பெறுகின்றன.

இந்த நிலையிலேயே அந்தக் காணியில் பெருமளவு மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்தக் காணிக்கு அருகில் உள்ள வீதியூடாக தினமும் இரவு பகலாக வாகனங்கள் மணல் கொண்டுசெல்கின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்தோடு, வீதியின் இருமருங்கிலும் காணப்படும் வயல்களில் உள்ள வரம்புகள் மற்றும் நிலங்களில் மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றன என்றும் மக்கள் குற்றஞ்சாட்டினர். (ப-9)

# சுகாதார நிலையத்தில் வெடிபொருள் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 6

தண்ணீரூற்று பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் இருந்து வெடிபொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த வளாகத்தில் துப்புரவுப் பணிகள் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது நிலத்தில் புதையுண்ட நிலையில் வெடிபொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த பகுதி, வெடிபொருள் அபாயப் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய வெடிபொருளை மீட்கும் நடவடிக்கையில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டனர். (ஐ-19)




# மயானத்தில் கழிவுப் பொருள்களை கொட்டுவதற்கு மக்கள் எதிர்ப்பு


யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு, காரைமுனங்கு மயானத்தில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதற்கு மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளர்.

இது தொடர்பில் மக்கள் தெரிவிக்கையில்;

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட காரைமுனங்கு மயானத்தில் பிரதேச சபையால் பிளாஸ்ரிக் மற்றும் மருத்துவக் கழிவுகள் கொட்டப்படுகின்றன. மயானங்களை அழகுபடுத்துகிறோம் எனக் கூறி, இவ்வாறான செயற்பாடுகளை பிரதேச சபை முன்னெடுக்கின்றது. இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் மீண்டும் பிளாஸ்ரிக் மற்றும் மருத்துவக் கழிவுகள் கொட்டப்படுகின்றன என்றனர்.

இதேவேளை இவ்வாறு மயானங்களில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதற்கு பிரதேச சபை அமர்வுகளில் அனுமதி வழங்கப்படவில்லை என குறித்த இடத்துக்கு வந்த நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் வாசுகி சுதாகரன் தெரிவித்தார். (ப-20)





# தமிழருடைய பூர்வீக இடங்களை அபகரிப்பதால் முரண்பாடு வரும்

## கலையரசன் எம்.பி. சுட்டிக்காட்டு

கல்முனையில் தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்கள் முஸ்லிம் நபர்களால் அபகரிக்கப்படுவது இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;



கல்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்முனை கிராம அலுவலர் பிரிவிலேயுள்ள அரச காணியொன்றில் மண் இட்டு நிரப்பும் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கை இங்குள்ள முஸ்லிம் தனிநபரால் மேற்கொள்ளப்படுகின்றது. இதனை கிராம அலுவலர் தடைசெய்துள்ளார். கிராம அலுவலர் தமது கடமையை முன்னெடுத்தபோது அவர் தாக்கப்பட்டுள்ளார். இந்த இடத்தை நாங்கள் பார்வையிட்டபோது அரச காணியொன்றின் விளம்பரப் பலகை அகற்றப்பட்டு மண் நிரப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே இங்கு அவ்வாறான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டது. மீளவும் இவ்விடயம் இங்கு நடைபெற்றுள்ளது.

தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்கள் முஸ்லிம் நபர்களால் போலி ஆவணங்கள் மூலம் அபகரிக்கப்படுவதும், இங்குள்ள மக்களை சுதந்திரமாக வாழ முடியாத சூழலை உருவாக்குவதுமான செயற்பாடுகள் இங்கு இடம்பெறுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் இந்தப் பிரதேசத்தில் தொடர்ச்சியான வன்முறையை உருவாக்குவனவாகவே இருக்கின்றன.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படக்கூடாது என்று எண்ணுகின்ற அரசியல்வாதியும், அவருடன் சேர்ந்த நபர்களுமே இவ்வாறான பணிகளைச் செய்கின்றார்கள். கடந்த மாதம் பெரியநீலாவணையில் இவ்வாறான சம்பவம் நடைபெற்று அது தடுத்து நிறுத்தப்பட்டது. தற்போது இங்கு இடம்பெற்றுள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக இது இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது. எனவே இவ்வாறான ஆக்கிரமிப்புப் பணிகள் இத்துடன் நிறுத்தப்பட வேண்டும். சமூகங்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும். அரச காணிகள் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடியில் வெளிமாவட்ட மீனவர்கள்

## வடமாராட்சி கிழக்கு மீனவர்கள் கவலை

வடமாராட்சி, ஜூலை 6

**வடமாராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் சட்டவிரோத கடற்றொழிலில் வெளிமாட்ட மீனவர்கள் ஈடுப்படுகின்றனர் என்று வடமாராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் வெளிமாட்ட மீனவர்கள் சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபடுகின்றனர். அனுமதிக்கப்படாத சுருக்கு வலைகள் மற்றும் வெளிச்சம் பாச்சி மீன்பிடிக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதால் எங்களின் தொழில் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. சிறியளவில் முதலீடுகளை மேற்கொண்டு கடற்றொழிலையே எமது முழுமையான வாழ்வாதாரத் தொழிலாக கொண்டுள்ள நாம் இதனால் அதிகளவு பாதிப்புக்குள்ளாகியுள்ளோம். எனவே இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-214)

# என்ன விலை கொடுத்தாலும் நேர்மையைக் கைவிடாதீர்கள்

## அன்ரன் றஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

மன்னார், ஜூலை 6

இன்றைய சமுதாயத்திலே நேர்மையாக இருப்பது பெரும் கேள்வியாக இருக்கின்றது. இப்பொழுது உள்ள சமூகம் ஏமாற்ற நன்றாகக் கற்றுக்கொண்டுள்ளது. இப்பொழுது நேர்மையாக இருப்பவர்களுக்கு பலவிதமான அச்சுறுத்தல்களும், ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் நிலையும் உருவாகியுள்ளது. ஆகவே என்ன விலை கொடுத்தாலும் நாம் நேர்மையை விட்டுக் கொடுக்கக் கூடாது என கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரன் றஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.



மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு அன்னை பெருவிழாத்திருப்பலியை தலைமை தாங்கி நிறைவேற்றிய அவர் தனது தலைமையுரையில் மேலும் தெரிவிக்கையில்;

ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார் என எலிசபத் கேட்டதைப்போல நாமும் கேட்க வேண்டி வரும். எலிசபத்தின் வருகைக்கு எலிசபத்தும் சக்கரியாசும் எதைச் செய்தார்களோ அதையே நாமும் செய்யவேண்டும். இவர்கள் இருவரும் கடவுளின் பார்வையில் நேர்மையுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் குற்றமற்வர்களாக இருந்தார்கள்.

இப்பொழுது இன்றைய சமுதாயத்திலே நேர்மையாக இருப்பது பெரும் கேள்வியாக இருக்கின்றது. இப்பொழுது உள்ள சமூகம் அது சிறுவர்களாக இருக்கலாம் அல்லது பெரியவர்களாக இருக்கலாம் இவர்கள் ஏமாற்ற நன்றாக கற்றுக்கொண்டுள்ளார்கள். யாரை நம்புவது என்று தெரியாத சமுதாயத்திலேதான் நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். குடும்பங்களிலே ஒருவரை ஒருவர் நம்பியிருந்தவர்கள் இப்போது நடுத்தெருவில் நிற்பதைப் பார்க்கின்றோம்.

இப்பொழுது நேர்மையாக இருப்பவர்களுக்கு பலவிதமான அச்சுறுத்தல்களும், ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் நிலையும் உருவாகியுள்ளது. ஆகவே என்ன விலை கொடுத்தாலும் நாம் நேர்ம்மையை விட்டுக்கொடுக்கக் கூடாது. நேர்மையுள்ளவர்களுக்கு இறைவன் ஒருநாள் நல்ல வெகுமதிகளைத் தருவார் - என்றார். (ப-60)

# யானை தாக்கி ஒருவர் இறப்பு!

திருகோணமலை, ஜூலை 6

யானை தாக்கியதில் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மீன்பிடிப்பதற்காக குறித்த நபருடன் மூவர் சென்றுள்ளனர். இந்த நிலையில் குறித்த நபரை யானை தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கரியாலைநாகபடுவான் குளத்தை முழுமையாக சீரமைக்கவேண்டும்

## பூநகரி பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 6



கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் குளத்தில் கடந்த பத்தாண்டுகளில் சொல்லும்படியான சீரமைப்புப் பணிகள் எவையும் இடம்பெறவில்லை என பூநகரி பிரதேச சபை உறுப்பினர் சி.சிறி ரஞ்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் முக்கிய குளமாக கரியாலைநாகபடுவான் குளம் காணப்படுகின்றது. ஆயிரத்து 520 ஏக்கர் வரையான நீர்ப்பாசன வயல் நிலம் காணப்படுகின்றது. மானாவாரி நிலம் 400 ஏக்கருக்கு மேல் உள்ளது. பல்லவராயன்கட்டு வயல் நிலங்களுக்கும் கரியாலைநாகபடுவான் குளத்தில் இருந்து நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியும். சிறுபோகத்தில் 600 ஏக்கர் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும். இக்குளத்தின் நீர் வருகை தரும் ஆறாக முடக்கன் ஆறு காணப்படுகின்றது. 2010ஆம் ஆண்டின் பின்னர் மீள்குடி யேற்றம் செய்யப்பட்ட பின்னர் சிறு திருத்த வேலைகளுக்காக ஐந்து மில்லியன் ரூபா வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

குளத்தின் அணைக்கட்டு முழுமையாக 7 கிலோ மீற்றர் தூரம் பண்டிவெட்டிக்குளம் அடங்கலாக சீரமைக்கப்பட வேண்டும். இக் குளத்தின் நீர் வருகை ஆறான முடக்கன் ஆறு குறைந்தது ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குத் துப்புரவுசெய்யப்பட வேண்டும். பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் முக்கிய குளமாக இக்குளம் காணப்பட்டபோதிலும் நீர் வருகின்ற முடக்கன் ஆறு துப்புரவு செய்யப்படாததால், குளத்தின் நீர் மட்டம் உயர்வதில் தாமதங்கள் உள்ளன. முடக்கன் ஆற்றைத் துப்புரவு செய்து கரியாலை நாகபடுவான் குளத்தின் நீர் மட்டத்தை அதிகரிக்க வேண்டும். கரியாலைநாகபடுவான் குளத்தின் அணைக்கட்டு பல ஆண்டுகளாக சீரமைக்கப்படாமலேயே உள்ளது. இக்குளத்தை அபிவிருத்திசெய்வதன் மூலம் குமுழமுனை வரை காணப்படுகின்ற வயல் நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியும். குளத்தின் அணைக்கட்டை உயர்த்துவதால் எந்தப் பிரச்சினைகளும் ஏற்படப் போவதில்லை. குளத்தின் பின்பகுதி காடாகவே காணப்படுகின்றது. எனவே கரியாலைநாகபடுவான் குளத்தை அபிவிருத்தி செய்வதில் தடைகள் இருக்கப் போவதில்லை - என்றார். (ப-13)

# நீர்ப்பாசன பிரதி இராஜாங்க அமைச்சின் செயற்றிட்டங்கள் யாழில் 50வீதம் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை 6



கிராமிய வயல்கள், அதுசார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் நீர்ப்பாசனப் பிரதி இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் 50 வீதம் நிறைவடைந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சர் அனுராதா ஜெயரட்னவுடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

குறித்த அமைச்சால் வடமாகாணத்தில் குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் சீரமைப்பு என 8 வேலைத் திட்டங்களுக்காக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 4 வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆழங்குளம், முதலியார் குளம், பினாக்கன் குளம், மற்றும், வழுக்கை ஆறு சீரமைப்பு போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் 50 வீதத்தை எட்டியுள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ்.மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், உதவி மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் வி.பிறேம்குமார், யாழ். மாவட்ட கமநல சேவைகள் ஆணையாளர் எஸ்.நிஷாந்தன், யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டின் கடல்வளத்தை வேறு நாடுகளுக்கு ஈடுவைக்கும்

# கோத்தா அரசின் செயற்பாடு வங்குரோத்துத்தனமானதே!

வடக்கு கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 6**

**தொடர்ச்சியாக எமது காணிகளைக் கையகப்படுத்தி, கடல்வளத்தை வேறு நாடுகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கு அல்லது ஈடு வைப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது. கோத்தாபய அரசு ஒரு வங்குரோத்து அரசாக செயற்படுவது எமக்கு தெட்டத் தெளிவாகத் தெரிகிறது என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.வீ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமீபத்தில் இலங்கை கடற்பரப்பில் எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் எங்களுடைய கடற்பிராந்தியம் தொடர்ந்தும் மாசுபடுகின்றது. கடல்வாழ் உயிரினங்கள் இறக்கின்றதோடு கழிவுப் பொருள்களும் கரையொதுங்குகின்றன.

இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வேறு அமைச்சர்களும் அவை இணையத்தளங்களில் வெளியாகும் படங்கள் எனவும் அதில் உண்மைத் தன்மை இல்லை எனவும் கூறுகின்றனர். சிலர், இது கடற்சூழலில் ஏற்பட்ட மாற்றத்தால் நிகழ்கின்றது என்று குறிப்பிடுகின்றனர்.

சூழல் மாற்றம் என்று கூறினால், எமது நாட்டுக்கு அயலில் இருக்கும் நாடான இந்தியாவின் கரையோரங்களில் இப்படியான கடல்வாழ் உயிரினங்கள் கரையொதுங்கவில்லை.

எமது நாட்டு அமைச்சர்கள் இதனை மூடிமறைத்து எமது மீனவ சமுதாயத்தையும் மக்களையும் ஏமாற்ற முயற்சிக்கின்றனர். இறந்து கரையொதுங்கிய உயிரினங்களது உடற்கூற்று பரிசோதனையை சரியாகச் செய்தால் அவை எப்படி உயிரிழந்துள்ளன எனத் தெளிவாகத் தெரியும்.

கப்பல் எரிந்த பிரச்சினை ஒரு பக்கம் இருக்க, கிளிநொச்சி மாவட்டத்திலே அட்டைக் குஞ்சுகளை அபிவிருத்திசெய்யும் நோக்கோடு வந்த சீனா இப்பொழுது கரையோரங்களிலே அட்டைப் பண்ணைகளை அமைத்து மீனவர்களுடைய வாழ்வாதாரத்திலேயே கை வைத்துள்ளது. இந்தக் குஞ்சுகளை உற்பத்திசெய்யும் சீனா எங்களுடைய அரசிடமோ, திணைக்களத்திடமோ, நக்டா நிறுவனத்திடமோ அல்லது செயலகத்திடமோ சரியான அனுமதியைப் பெறாமல் தான்தோன்றித்தனமாக, இந்த வேலையை ஆரம்பித்திருப்பது ஒரு நாடு இன்னொரு நாட்டுக்குள்ளே, ஆக்கிரமிப்பு நடவடிக்கையைச் செய்வதாகவே கருதப்படும்.

எது எப்படி இருந்தாலும் எமது அரசின் பின்புல ஆதரவு அவர்களுக்கு மறைமுகமாக இருக்கின்றது வெளிப்படையாகத் தெரிகின்றது.

அந்தப் பண்ணையின் முகாமையாளராகக் கடமையாற்றுபவர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவர் அந்த நிறுவனத்தில் கடமையாற்றுவது அந்தக் கட்சியின் அமைச்சருக்கு தெரியாமல் இருக்காது. அப்படி இருக்கும்போது அமைச்சர் இதற்கு எவ்வாறு பதில் சொல்லப்போகின்றார் என்ற கேள்வியும் எழுகின்றது - என்றார். (ப-27)



## மின்னல் தாக்கியதில் பனைமரம் தீப்பிடிப்பு

கிளிநொச்சி.ஜூலை 6

மின்னல் தாக்கியதில் குடியிருப்பில் இருந்த பனைமரம் ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உதயநகர் மேற்கு 30 வீட்டுத்திட்டப் பகுதியில்இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் வேறு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. தீப்பற்றிய பனை மரம் தொடர்ந்து பெய்த மழையை அடுத்து தானாகவே அணைந்துள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-113)

## குடிதண்ணீர் தாங்கி கையளிப்பு

புங்குடுதீவு.ஜூலை 6

கடந்த மாதம் வீசிய கடும் காற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு தண்ணீர்த் தாங்கி வழங்கப்பட்டது.

கடற்றொழிலை நம்பி வாழ்கின்ற இக் குடும்பத்தின் வீட்டில் காணப்பட்ட பல பொருள்கள் காற்றின் காரணமாக சேதமடைந்திருந்தன. குறிப்பாக குடிதண்ணீர் தாங்கியொன்று முற்றாக சேதமடைந்திருந்தது. இதனையடுத்து வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் நிதியுதவியில் குடிதண்ணீர்த் தாங்கி வழங்கப்பட்டது. இதேவேளை காற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 3 குடும்பங்களுக்கும் பிரதேசசபை உறுப்பினரால் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ)

## சம்பிரதாயங்களை மீறி யாழில் வீட்டுத்திட்டங்களுக்கு அடிக்கல்

பயனாளிகள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஜூலை 6


யாழ் மாவட்டத்தில் வீட்டுத்திட்டங்களுக்கான அடிக்கல் நடும்போது. நாள், நட்சத்திரம் பாராது, பயனாளிகளின் விருப்பத்துக்கு மாறாக அடிக்கல் நடப்படுகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

யாழ் மாவட்டத்தில் அரசால் வழங்கப்படுகின்ற வீட்டுத்திட்டங்களுக்கான தெரிவுகள் முழுமையாக நிறைவுபெறவில்லை. இந்த நிலையில் யாழில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வீட்டுத்திட்டங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. புதிய வீட்டுக்கான நாள் அத்திபாரம் போடும்போது அனேக மானவர்கள் தமக்கு விரும்பிய சமூக அந்தஸ்து உள்ளவர்கள் அல்லது தமது உறவினர்களில் வயது முதிர்ந்தவர்களை அழைத்து நாள் அத்திவாரம் இடுவது சம்பிரதாயமாக இருந்து வருகின்றது. இந்நிலையில் அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளர்கள் தாமே குறித்த வீட்டுக்கான நாளை இட வேண்டும் என பயனாளிகளை நிர்ப்பந்திக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுப நேரம் பாராது, நாள், திகதி பாராது தமக்கு நேரம் கிடைக்கும்போது வீட்டுத்திட்டங்களுக்கான அடிக்கல்களை நடுவது பயனாளிகளிடையே தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. மறுத்தால் வீட்டுத்திட்டம் இல்லாமல் போய்விடும் என்ற அச்சத்தில், யாரோ ஒருவர் அடிக்கல் நடுவதை கைகட்டி வேடிக்கை பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

ஆகவே பொறுப்பானவர்கள் சமய சம்பிரதாயங்களைக் கருத்திற்கொண்டு பயனாளிகளின் விருப்பத்துக்கு புதிய வீட்டுக்கான அத்திபாரத்தை இடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பலரும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ப-27)





## மணலுக்குள் மறைக்கப்பட்டு முதிரைக்குற்றிகள் கடத்தல்

ஒருவர் கைது

மணலுக்குள் புதைத்து சூட்சுமமான முறையில் யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகள் பளை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. சூட்சுமமான முறையில் முதிரை மரக்குற்றிகள் கடத்தப்படுகின்றன என்று பளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு இணங்க பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் பொலிஸார் விசேட பரிசோதனையை மேற்கொண்டனர். இதன்போது மாங்குளம் பகுதியில் இருந்து யாழ் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போதே முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டன. முதிரை மரக்குற்றிகளுக்கு மேல் மணல் ஏற்றப்பட்டு சூட்சுமமான முறையில் கொண்டுசெல்லப்பட்டமை தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார். (ப-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி வழங்குவதில் பாரபட்சங்கள் எதற்கு?

## வன்னி மக்களுக்கு கிடைப்பதில்லை செல்வம் எம்.பி. பகிரங்க குற்றச்சாட்டு



**வவுனியா, ஜூலை 6**

**கொரோனாத் தடுப்பூசிகளை பாரபட்சமின்றி வன்னி மக்களுக்கும் ஏற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது: கொரோனாத் தொற்று நாட்டில் பரவலாகக் காணப்படும் நிலையில் தடுப்பூசிகளை வழங்குவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் தற்போது இந்த நடவடிக்கையில் அரசின் ஈடுபாடு போதுமானதாகக் காணப்படாமையாலேயே பல பகுதிகளிலும் மக்கள் முதலாவது தடுப்பூசியைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குச் சென்றுள்ளனர். வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவை உள்ளடக்கிய வன்னிப் பிரதேசத்தில் இதுவரை எந்த ஒரு பொதுமகனுக்கும் தடுப்பூசி வழங்கப்படவில்லை. ஆடை தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் சுகாதாரப் பகுதியினருக்கு மாத்திரமே தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய பொது மக்களுக்கு வழங்க பாரபட்சம் காட்டி வரும் அரசு இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். வடமாகாணத்தின் நுழைவாயிலாகக் காணப்படும் வவுனியா மக்களுக்கு தடுப்பூசியை வழங்குவது கட்டாயமாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதற்குமப்பால் இன்று வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் விகிதாசார அடிப்படையில் பார்க்கின்றபோது அதிகமாகக் காணப்படுகின்றனர். கொரோனா மரணங்கள் 19 வரை அதிகரித்துள்ளன. இது இந்த மாவட்டத்தில் வாழும் மக்கள் தொகையோடு ஒப்பிடுகையில் அதிகமாகவே பார்க்கப்படுகின்றது.

இதேபோன்று இந்தியாவில் பரவியுள்ள டெல்டா வைரஸ் பரவல் மீனவர்கள் மூலம் மன்னாரில் பரவுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளது. எனவே இங்குள்ள மக்களுக்கும் உடனடியாகத் தடுப்பூசி வழங்கவேண்டும்.

முல்லைத்தீவில் மீன் வியாபாரத்துக்காக பல மாவட்டங்களிலும் இருந்து மக்கள் வந்து செல்வதாலும், குறித்த மாவட்டம் வட மத்திய மற்றும் கிழக்கு மாகாண எல்லைகளைக் கொண்டு காணப்படுவதாலும் ஏனைய மாகாண மக்கள் பல்வேறு தேவைகளின் பொருட்டு இங்கு வந்து செல்வதாலும் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கும் குறித்த தடுப்பூசி கட்டாயமாகச் செல்லுத்தப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

எனினும் தற்போதைய அரசு இது தொடர்பில் அக்கறையின்றிக் காணப்படுகின்றமையைப் பார்க்கும்போது பாரபட்சமாகச் செயற்படுவதாகவே எண்ணத்தோன்றுகின்றது- என்றுள்ளது. (ப-110)



## தென்மராட்சியிலும் நேற்று தடுப்பூசி

சாவகச்சேரி ஜூலை 6

தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு சைனோஃபார்ம் தடுப்பூசி ஏற்றும் பணிகள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

காலை தொடக்கம் பெரும் எண்ணிக்கையான முதியவர்கள் முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வரிசைகளில் நின்று பதிவுகளை மேற்கொண்டு தடுப்பூசியை ஏற்றிச் சென்றதைக் காணமுடிந்தது. பிரதேசத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட 13 ஆயிரம் பேர் வசிக்கின்ற போதிலும் 5 ஆயிரத்து 106 தடுப்பூசிகளே வழங்கப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எதிர்வரும் 10ஆம் திகதி வரை கைதடி, கொடிகாமம் மற்றும் வரணி ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தடுப்பூசி ஏற்ற விரும்புபவர்கள் தொற்றாநோய் தொடர்பான பதிவுகளும் இடம்பெறுவதால் தமது கிளினிக் கொப்பியையும் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைதடி சாந்தி நிலையத்தில் தங்கியுள்ள முதியவர்களுக்கும் நேற்று தடுப்பூசி ஏற்றப்பட்டது. பிரதேசத்தில் உள்ள அரச திணைக்கள அலுவலகங்களில் முன்னரங்கப் பணிகளில் உள்ளவர்களுக்கு ஏற்றுவதற்கென 941 தடுப்பூசிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 248 கர்ப்பிணிகளுக்கு ஏற்றுவதற்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## முல்லையில் 60 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தடுப்பூசி வேண்டும்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் தடுப்பூசி பெறத் தகுதியுடையவர்களாக 60 ஆயிரம் பேர் வரை காணப்படுகின்றனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.உமாசங்கர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மாவட்டத்தில் 30 அகவைக்கு மேற்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் வயோதிபர்கள் உள்ளிட்ட ஆண் பெண்கள் என 60 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும். இதனை விட முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் வெலிஓயா பிரதேசத்திலும் இரண்டு ஆடைத்தொழிற்சாலைகள் காணப்படுகின்றன. அவற்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அரசு தடுப்பூசி ஏற்றியுள்ளது. இவர் களைத் தவிர்த்து மாவட்டத்தில் உள்ள ஏனைய மக்களுக்கு தடுப்பூசி ஏற்றப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் கட்டளைக்கு இணங்க இராணுவத் தளபதியும் கொவிட் பரவல் தடுப்புக்கான தேசிய செயற் பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் அறிவுரையின்படி புதிய நடமாடும் தடுப்பூசி ஏற்றும் சமூக நிலையங்களை அறிவித்துள்ளார்கள். புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ள நிலையில், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சமூக நிலையமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வருவோர் மின்சாரப் பட்டியல் அல்லது தொலைபேசி கட்டணச் சிட்டையுடன் நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம அலுவலரால் வழங்கப்பட்ட உறுதிப்பத்திரம் அல்லது அடையாள அட்டை அல்லது வாக்காளர் அட்டையைக் கொண்டுவருதல் அவசியமாகும் - என்றார். (ப-19)





## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு மன்னாரில் நேற்று தடுப்பூசி

மன்னார், ஜூலை 6

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் இணைந்து நேற்றுக் காலை மன்னார் மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

மன்னார் நகரத்தில் உள்ள முதலீட்டுச் சபைக் கட்டடத்தில் இந்த செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. மன்னார் நகர் மற்றும் பிரதேசத்தில் உள்ள ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் முதியோருக்கும், நானாட்டான் பிரதேசத்தின் வங்காலை கிராமத்தில் வசிக்கும் முதியோருக்கும் நேற்று தடுப்பூசி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் மன்னார் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு மருத்துவர் மருத்துவ கலாநிதி சுதாகர் கதிர்காமநாதன், மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ஹில்றோய் பீரிஸ் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுடன் இராணுவத்தினரும் கலந்துகொண்டனர். (ப-213,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்கள் அரசியலே தேவை!

தமிழர்கள் மத்தியில் ஒற்றுமையும், குதிரைக் கொம்பும் ஒன்று என்று பொதுவாகக் கூறப்படுவதுண்டு. ஏனெனில் இரண்டையுமே கண்ணில் காணவே முடியாது. இங்குள்ள தமிழ் அரசியல் கட்சிகளும், அவற்றின் கடந்த கால செயற்பாடுகளும் அதற்கு நல்லதொரு உதாரணம் எனலாம்.

இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளை விடவும் பிரதானமாக தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கொள்கைகளை முன்னிறுத்திச் செயற்படும் கட்சிகளுக்கு பெரும் பொறுப்பு இருக்கின்றது. 2009ஆம் ஆண்டின் பின்னர் ஓர் இனத்தின் அபிலாசைகளை, உரிமைகளை முன்னகர்த்திச் செல்லும் பொறுப்பு அவற்றின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவை தங்கள் பொறுப்பின் கனதியை உணராது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற அங்கலாய்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தேசியக் கட்சிகள் தங்கள் முன்னுள்ள மிகப் பெரும் பொறுப்பை உணராது, தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கின்றன. கட்சியின் ஆதரவாளர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. திசைக்கொன்றாக சிதறி மோதிக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து, தமிழ் மக்களின் அபிலாசைகளை நோக்கி நகர்த்துவதற்கான ஒற்றுமையை ஏற்படுத்த பல தருணங்களில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அவை இதுவரை அறுவடையாகவில்லை.

இப்போதும் தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகளுக்குள்ளே ஒற்றுமையை ஏற்படுத்தவும் முயற்சிக்கப்படுகின்றது. ஒரு கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகளுக்கு இடையிலேயே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டியிருக்கின்றது என்பதை விட, தற்போதுள்ள நிலைமையை விளக்குவதற்கு வேறெதுவும் தேவையில்லை.

ஒற்றுமைக் கோசத்துடன் ஒன்றுகூடிப் பேசிக் கொண்டிருப்பதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. தமிழ் மக்களின் ஏகோபித்த தெரிவாகியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது உடைந்து சிதறிப் போயிருக்கின்றது. இதற்கான காரணங்கள் என்ன என்பதை ஆராய்ந்து, அவற்றைச் சீர்திருத்துவதே இப்போதுள்ள தேவையாகவிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிதைவுகளைப் பார்க்கும்போது, அனைத்தும் தேர்தல் காலத்திலேயே நடந்திருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பிரிந்தது முதல் அதன் பின்னர் நடந்த அனைத்துப் பிரிவுகளுக்கும் தேர்தல் காலங்களில், ஆசனப் பங்கீடே மூலப் புள்ளியாக இருந்துள்ளது.தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அப்பால், தமிழ்த் தேசியக் கொள்கைகளை முன்னிறுத்தி வரும் தமிழ் கட்சிகளின் உடைவுகளும் தேர்தல் காலத்தின்போதே ஏற்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்த வேண்டிய இந்தக் கட்சிகள், அரசியல் நலனைச் சிந்திக்க, தேர்தல் அரசியலைச் செய்ய ஆரம்பித்தமையே இவை அனைத்துக்கும் காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது. இனத்தின் எதிர்காலத்தைச் சிந்திக்காது அற்ப விடயங்களுக்காக, அரசியல் பதவிகளுக்காக மோதிக் கொள்ளும் போக்கைக் கைவிடும்வரை தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை பிறக்காது.

வாரந்தோறும், மாதந்தோறும் கூடிப் பேசுவதால் எதுவும் நேர்ந்துவிடப் போவதில்லை. தமிழ் அரசியல் தலைமைகள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் இலாபங்களை நோக்கிச் சிந்திக்காது தேர்தல் அரசியலை விடுத்து இனத்தின் பாற்பட்டுச் சிந்தித்து, மக்களுக்கான அரசியல் பாதையில் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை நோக்கி நகர வேண்டும். தமிழ் மக்களின் அவாவும் அதுவே.




அத்தியாவசிய சேவை என்ற போர்வையில்

# ஒருதொகை மாடுகள் பாரவூர்தியில் கடத்தல்

## வவுனியாவில் சம்பவம்





**வவுனியா, ஜூலை 6**

**அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் வாகனம் என்று அடையாளப்படுத்திய பாரவூர்தியில் மாடுகளைக் கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.**

இந்தச் சம்பவம் வவுனியா நெளுக்குளம், புளியங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

பாரவூர்தியில் அத்தியாவசிய சேவை என எழுதப்பட்ட 'ஸ்ரிக்கரை' காட்சிப்படுத்தி மாடுகள் கடத்தப்படுகின்றமை தொடர்பில் நெளுக்குளம் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிரோசன் தலைமையிலான குழுவினர் விரைந்து செயற்பட்டு பாரவூர்தியை மறித்துச் சோதனையிட்டபோது மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டார்.

அத்துடன் பாரவூர்தியில் எவ்வித அனுமதியும் இன்றி கொண்டுசெல்லப்பட்ட 14 மாடுகளையும் பொலிஸார் மீட்டனர். சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-110)


தொடர்கின்றது சோகம்

# சிதைந்த நிலையில் பிறிதொரு கடலாமை

## வேலணையில் கரையொதுங்கியது

வேலணை, ஜூலை 6

வேலணை துறையூர் கடற்கரையில் நேற்று இறந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது. தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கரை ஒதுங்கிய கடலாமையை இனங்கண்டு வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவித்தனர்.



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் எரிந்த பின்னர் கடல்வாழ் உயிரினங்கள் தொடர்ச்சியாக உயிரிழந்து கரையொதுங்கி வருகின்ற நிலையிலேயே வேலணையிலும் இவ்வாறு கடல் ஆமைகள் கரையொதுங்குகின்றன. இதுவரையில் தீவகப் பகுதிகளில் ஒரு திமிங்கலம் ஒரு டொல்பின் மற்றும் மூன்று கடலாமைகள் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்கள் அரச திணைக்களத்தால் அபகரிப்பு

## நறுவிலிக்குளம் பண்ணையாளர்கள் கவலை

மன்னார், ஜூலை 6

**மன்னார் நறுவிலிக்குளம் கடற்கரைப் பகுதியில் கால்நடை மேய்ச்சல் நிலங்களை வனவிலங்குகள் சரணாலயத் திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ளனர் என்று பண்ணையாளர்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.**



மன்னார் நறுவிலிக்குளம் கடற்கரையிலிருந்து அச்சங்குளம் வரையான சிறு காட்டுப் பகுதிகளை பல வருடங்களாக அந்த கிராமங்களில் உள்ள மக்கள் தங்களின் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்களாகவும், கால்நடைகளை அவ்விடங்களில் பட்டி அமைத்துப் பராமரிப்பதற்கும் பயன்படுத்தி வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களாக வன விலங்குகள் சரணாலயத் திணைக்களத்தினர் குறித்த பகுதிகளை வேலி அடைத்து கையகப்படுத்தியுள்ளனர். இதனால் பண்ணையாளர்கள் கால்நடைகளைப் பாதுகாக்கவும், பட்டிகளில் அடைத்துப் பராமரிக்கவும் முடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளனர். குறித்த திணைக்களத்தினர் கையகப்படுத்தியுள்ள பகுதிக்குள் கால்நடைகள் சென்று விட்டாலோ அல்லது ஏதேனும் தேவை கருதி சிறு தடிகளை பொதுமக்கள் வெட்டினாலோ கைதுசெய்யப்பட்டு நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றது என்று பண்ணையாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-213)





## ரங்கராஜாவின் நினைவாக பொன்னாலையில் உதவி

பொன்னாலை, ஜூலை 6

முன்னாள் ஆளுநரின் செயலரும், இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளருமான சிவகுருநாதன் ரங்கராஜாவின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு, பொன்னாலை நாராஜணன் அறக்கட்டளையால் பொன்னாலை மக்களுக்கு உலருணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பொன்னாலை கிராம அலுவலகர் அலுவலகத்தில், கிராம அலுவலர் சி. சிவரூபன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, பொன்னாலை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட, கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட பொருண்மியம் நலிவடைந்த 50 குடும்பங்களுக்கு தலா 2500 ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இளங்கோவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செலவநாயகம், அமரர் ரங்கராஜாவின் பாரியார், பொன்னாலை நாராஜணன் அறக்கட்டளை நிர்வாகத்தினர் மற்றும் மக்கள் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய கலந்துகொண்டனர். (ப)





## புதுக்குடியிருப்பில் உதயமாகிறது சௌபாக்கிய உற்பத்திக் கிராமம்

முல்லைத்தீவு, ஜூலை 6

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வேணாவில் மற்றும் கைவேலி கிராமங்களை இணைத்த சௌபாக்கிய உற்பத்திக் கிராமத்துக்கான ஆரம்பப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரு கிராமங்களைச் சேர்ந்த உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 10 மில்லியன் ரூபா செலவில் உற்பத்தியாளர்களுக்கான உற்பத்திச் செயற்பாட்டுக்கான உபகரணம், தொழில், இடம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் சௌபாக்கிய கிராம உற்பத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. தோல் பொருள்கள், பற்றிக் உற்பத்திகள் மற்றும் ஆடை உற்பத்திகளை மேற்கொள்வதற்காக பொதுக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்தால் நடப்பட்டது. இரண்டு மில்லியன் ரூபா செலவில் அந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதன்போது மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-19)



## கற்றல் உபகரணம் கையளிப்பு

கிளிநொச்சி.ஜூலை 6

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவி ஒருவரின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக தொழில்நுட்ப உபகரணம் ஒன்று அண்மையில் வழங்கப்பட்டது.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் தொழில்நுட்ப சாதனங்கள் மூலமே நடைபெற்றுவருகின்றன.

இந்தச் சூழலில் குறித்த சாதனம் இல்லாமல் கல்வியைத் தொடர முடியாது தவித்த உயர்தர கணிதப் பிரிவு மாணவி ஒருவருக்கே குறித்த தொழில்நுட்ப சாதனம் வழங்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணியின் ஒழுங்குபடுத்தலில் இந்த உதவி வழங்கப்பட்டது. (ஐ-13)

## இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உதவிப் பொருளாளராக வவுனியா நபர்



வவுனியா.ஜூலை 6

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாகசபைத் தேர்தலில் உதவிப் பொருளாளராக வவுனியாவைச் சேர்ந்த அருணகிரிநாதன் நாகராஜன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபை தேர்தல் அண்மையில் நடைபெற்றது.குறித்த தேர்தலில் வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி உதவிப்பொருளாளர் பதவிக்கு அ. நாகராஜன் போட்டியிட்டிருந்தார்.

இந்த நிலையில் தேர்தலில் வெற்றிபெற்று குறித்த பதவிக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் நான்கு வருடங்கள் வவுனியா மாவட்ட உதைப்பந்தாட்ட சங்கத்தின் பொது செயலாளராகவும், இரண்டு வருடங்கள் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முக்கிய பதவிக்கு வவுனியாவில் இருந்து ஒருவர் தெரிவுசெய்யப்பட்டமை இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-110)



வவுனியா செட்டிக்குளம் துட்டுவாகை கிராமத்தைச் சேர்ந்த 10 முதியோர் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. சமூக ஆர்வலர் ஜெ.சிவானந்தராசாவின் வேண்டுகோளுக்கு அமைவாக புலம்பெயர் உறவுகளின் நிதி பங்களிப்பில் இவ் உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-213)

## 50 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

கிளிநொச்சி.ஜூலை 6


கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள நாவல்நகர் கிராமத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. கொழும்பு றோயல் கல்லூரியின் 1980ஆம் ஆண்டு உயர்தர தமிழ் மாணவர்களின் நிதி உதவியில் கிளிநொச்சி இராணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி.ரணசிங்க, 572 படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, கிராம அலுவலர் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரோனா வைரஸ் மேலும் உருமாற்றம்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை



**கொழும்பு, ஜூலை 6**

**உலகம் முழுவதும் வரலாறு காணாத பாதிப்புகளை ஏற்படுத்திவரும் கொரோனா வைரஸ் தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருவதால், இதன் தீவிரத்தைக் கணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானம் கேப்ரிஜேசஸ் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பல்வேறு நாடுகளில் அல்பா, பீட்டா மற்றும் காமா, டெல்டா, டெல்டா பிளஸ் ஆகிய பல்வேறு திரிபுகளுடன் தொடர்ந்து உருமாற்றம் அடைந்து வருகின்றது. டெல்டா வைரஸைத் தொடர்ந்து தற்போது டெல்டா பிளஸ் வகை வைரஸ் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றது. இந்த ஆபத்துக்கு எந்த ஒரு நாடும் விதிவிலக்கு அல்ல.

அதேவேளை தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை உலக நாடுகளுக்கு இடையே பகிர்ந்துகொள்வதன் மூலம் நாம் இந்த பாதிப்புகளைக் கட்டுப்படுத்த முடியும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் அனைத்து நாடுகளிலும் குறைந்தபட்சம் 10 சதவீத மக்களாவது கொரோனாத் தடுப்பூசி செலுத்தியிருப்பதை உறுதிசெய்ய வேண்டும்- என்றார். (ம-4)




# மற்றொரு பகுதி நேற்று முடக்கம்

கொழும்பு, ஜூலை 6

களுத்துறை மாவட்டத்தில் குடா வஸ்கடுவ மேற்கு கிராம அலுவலர் பிரிவு நேற்றுக் காலை 6 மணியுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரத்தினபுரி மாவட்டத்தில் தாபனே கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# 339 பேர் கைது

கொழும்பு, ஜூலை 6

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் 339 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இது வரை 47 ஆயிரத்து 579 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# தடுப்பூசி ஏற்றினாலும் வழிகாட்டல் அவசியம்

## சுகாதார அமைச்சு ஆலோசனை

கொழும்பு, ஜூலை 6

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களைப் பெற்றுக் கொண்டாலும், சுகாதார வழிகாட்டல்களை உரியவாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது. இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்தன தெரிவிக்கையில்,

நாட்டில் தொற்றாளர்கள் குறைவாக பதிவாகி வருவதால், ஆபத்து இல்லை என்ற முடிவுக்கு நாம் வர முடியாது. தொடர்ந்தும் ஆயிரத்து 500 தொடக்கம் 2 ஆயிரம் வரையில் தொற்றாளர்கள் பதிவாகின்றனர். டெல்டா திரிபு வைரஸ் தொற்றுடன் 14 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் வேறு திரிபுடைய வைரஸ் தொற்றுக்கள் ஏற்படலாம். எனவே சுகாதார வழிகாட்டல்களை மக்கள் உரியவாறு பின்பற்ற வேண்டும்- என்றார். (ம-4)




# பைஸர் தடுப்பூசிகள் 26 ஆயிரம் வந்தடைவு

கொழும்பு, ஜூலை 6

இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவுசெய்யப்பட்ட பைஸர் தடுப்பூசியின் முதல் தொகுதி நேற்றுக் காலை கொழும்பை வந்தடைந்தது.

இலங்கை கொள்வனவுசெய்துள்ள 2 லட்சம் தடுப்பூசிகளில், முதல் தொகுதியாக 26 ஆயிரம் டோஸ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இந்த தடுப்பூசியை, தெற்காசிய பிராந்தியத்தில் ஒரு நாடு பெறுவது இதுவே முதல் முறையாகும்.

இவற்றை விரைவில் மக்களுக்குச் செலுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# அமெரிக்க தடுப்பூசியால் இலங்கைக்கு அதிர்ஷ்டம்

## ஜனாதிபதி பெருமிதம்

கொழும்பு, ஜூலை 6

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பைஸர் தடுப்பூசி, இலங்கைக்கு முதல் முதலாக கிடைத்த அதிர்ஷ்டம். தெற்காசிய நாடுகளிலேயே இலங்கைக்கு முதன்முதலில் இந்த அதிர்ஷ்டம் கிடைத்ததையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பைஸர் தடுப்பூசியின் 26 ஆயிரம் டோஸ்கள், கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தன. இது தொடர்பில் ஜனாதிபதி தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவிக்கையில்,

தெற்காசியாவில் பைஸர் தடுப்பூசிகளைப் பெற்ற முதல் நாடாக இலங்கை திகழ்கிறது. அனைத்து இலங்கையர்களுக்கும் தடுப்பூசிகளை உறுதிசெய்வதற்கான பணிகள் குறித்து நான் பெருமைப்படுகிறேன். தடுப்பூசி ஏற்றும் திட்டம் நாடு முழுவதும் தொடர்கின்றது- என்றார். (4)




# தொற்றுப் பரவல் இன்னும் வேகம்

## விசேட மருத்துவர் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 6

புள்ளிவிவரங்களைக் கொண்டு கொரோனாத் தொற்றுப் பரவல் கட்டுப்பட்டுவிட்டது என்று கருத முடியாது. இந்தத் தொற்று மிக வேகமாக நாடளாவிய ரீதியில் பரவிக்கொண்டிருக்கின்றது எனவே மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் இவ்வாறு இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவி விசேட மருத்துவர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நடைமுறையில் இருந்த பயணக் கட்டுப்பாடுகள் காரணமாகவே கொரோனாவால் உயிரிழப்புக்கள் குறைந்திருந்தன. இந்தக் காலப்பகுதியில், தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகளை மிக வேகமாக முன்னெடுத்திருக்க வேண்டும். கொழும்பு உள்ளிட்ட பல பிரதேசங்களில், டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.


ஒரு வாரத்துக்கு நாட்டை மூடியதன் பின்னரே அதன் பெறுபேற்றை தெரிந்துகொள்ள முடிந்தது. அதனால் இறப்பு விகிதம் குறைந்திருந்தது. தற்போது பரவிகொண்டிருக்கும் தொற்றின் பெறுபேறுகள், இன்னுமொரு மாதத்துக்குப் பின்னரே தெரியவரும்.

எனவே பெறுபேறு வரும் வரையிலும் காத்திருந்தோமெனில், அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும்- என்றார்.(4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு எதிராக மற்றுமொரு பலப்பரீட்சை

## 20ஆம் திகதி வாக்கெடுப்பு



கொழும்பு, ஜூலை 6

**வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன் வைக்கப் பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது இரு நாள்கள் விவாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் விவா தம் நடத்தப்பட்டு 20ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப் படும்.**

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் நாடாளுமன்றக் கட்டத்தொகுதியில் கூடியது. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

நாடாளுமன்ற அமர்வு இன்று ஆரம்பமாகின்றது. எனவே, இந்த வாரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும், வலுசக்தி அமைச்சருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை சம்பந்தமாகவும் இதில் ஆராயப்பட்டுள்ளன. இதன்போதே விவாதத்துக்கு 2 நாள்கள் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பையடுத்து அதனை அடிப்படையாகவும், மேலும் சில காரணங்களை முன்னிலைப்படுத்தியும் வலுசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கடந்த மாதம், ஐக்கிய மக்கள் சக்தியால் கையளிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கான பெரும்பான்மையை அரசு கொண்டிருந்தாலும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள பஸில் ஆதரவு அணி உறுப்பினர்கள் எத்தகைய முடிவை எடுப்பார்கள் என்று இன்னும் உறுதியான தகவல் வெளியாகவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டணி உள்ளிட்ட எதிரணிகள் எதிர்த்து வாக்களிக்கவுள்ளன. தமிழ்க் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, விக்கி அணி ஆகியவற்றின் அதிகாரப் பூர்வ முடிவு இன்னும் வெளிவரவில்லை.

சிறிலங்கா பொதுஜன பெரமுன வசம் 145 ஆசனங்கள் உள்ளன. கூட்டுக் கட்சிகளையும் சேர்த்து 149 ஆசனங்கள் உள்ளன. எனவே, 140 க்கும் குறைவான வாக்குகளை அரசு பெறும்பட்சத்தில் அது கூட்டணி அரசுக்கான பின்னடைவாகவே கருதப்படும். சிலவேளை பஸில் அணி உறுப்பினர்கள் சிலர் வாக்கெடுப்பில் பங்கேற்காவிட்டால் கூட அது அரச கூட்டணிக்குள் உள்ள குழப்பத்தை வெளிப்படுத்தும்.

சிலவேளை, 20க்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவையும் பெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு அதிக வாக்குகளைப் பெற்று பிரேரணையை ஆளுந்தரப்பு தோற்கடித்தால் அது கூட்டணி ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக அமையும். அரசுமீது மக்கள் தற்போது அதிருப்தியில் உள்ளனர்.

எனவே, இரண்டாவது தேர்வையே பஸில் தரப்பும் விரும்பும் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. (4,44)

# இனியும் பொறுமையில்லை தீர்வு மஹிந்தவின் கையில்

## வாசுதேவ வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 6

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையேயான முரண்பாடுகளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச விரைவில் தீர்வு காண வேண்டும் என்று நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணியமைத்து தேர்தலில் போட்டியிட்டோம்.

அனைத்துத் தரப்பினரது ஒன்றிணைவையும் கருத்தில் கொண்டே நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர். 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலிலும் கூட்டணியின் பலத்தைக் கருதியே மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கினர். பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் பங்காளிக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் தொடர்ச்சியாக புறக்கணக்கப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் அரச கொள்கைக்கு முரணாக செயற்பட்டபோது அதனை பங்காளிக் கட்சித் தலைவர்களால் தவறுகளை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. தீர்மானம் எடுப்பது காலதாமதமாகுவது கூட்டணியை மேலும் பலவீனப்படுத்தும். பங்காளிக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கூட்டணி குறித்து குறிப்பிடும் கருத்துக்கள் அரசில் காணப்படும் பிரச்சினைகளை பகிரங்கப்படுத்தியுள்ளன. இவ்வாறான கருத்துக்கள் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கும். கூட்டணியின் முரண்பாடுகள் தீவிரமடைந்தால் அது அரசை முழுமையாகப் பாதிக்கும்- என்றார். (4)




# எதிரணி பலமற்றது பிரேரணை தோல்வி

## கிரியல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடையும் என்பது எமக்குத் தெரியும். எனினும், மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்புக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிரணி வசம் பெரும்பான்மை பலம் இல்லை. எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடையும். இருந்தாலும் மக்களுக்காகவே பிரேரணையைக் கொண்டு வந்தோம்- என்றார்.

அதேவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவசர விவாதமாக எடுக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று முன்வைக்கப்படும் பட்சத்தில் அதற்கு முன்னுரிமை வழங்குவதே நாடாளுமன்ற சம்பிரதாயம். நாம் பிரேரணையக் கையளித்து இரு வாரங்கள் ஆகின்றன. எனினும், இந்த மாதத்தில் மூன்றாவது வாரத்திலேயே விவாதத்துக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (4,44)

# கம்மன்பிலவுக்கு ஆதரவு: இன்னும் தீர்மானமில்லை

## மொட்டுக் கட்சி கைவிரிப்பு

கொழும்பு, ஜூலை 6

அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கட்சி மட்டத்தில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எழுப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து கிராம மட்டத்திலான எமது கட்சி உறுப்பினர்களின் பிரதிபலிப்பையே நாம் கட்சி என்ற வகையில் அறிக்கையாக வெளியிட்டோம். அதற்கான உரிமை எமக்கு உள்ளது. தற்போதைய நிலைவரம் (நம்பிக்கையில்லாப் பிரேரணை) தொடர்பில் எமது கட்சித் தலைவர்களும், ஏனைய கட்சித் தலைவர்களும் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பார்கள்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவா அல்லது எதிர்ப்பா என்று இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்துவதற்கும், அரசை நெருக்கடிக்குள் தள்ளுவதற்கு மிடையில் வித்தியாசம் உள்ளது. எனவே, எதிரணியின் பொறிக்குள் சிக்கிச் செயற்படுவதற்கு நாம் தயாரில்லை. அதேபோன்று அன்று கட்சி எடுத்த தீர்மானத்தில் இன்றும் உறுதியாகத்தான் இருக்கின்றோம். அந்த நிலைப்பாடு மக்களுக்காக எடுக்கப்பட்டதே தவிர, எதிரணிக்காக எடுக்கப்பட்டது அல்ல.

அமைச்சர் கம்பன்பிலவுக்கு ஆதரவு தெரிவித்து, பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கப்பது தொடர்பில் கட்சியின் தலைவர்கள், ஏனைய கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி முடிவெடுப்பார்கள்.

எமது கட்சி ஒழுக்க கட்டமைப்புள்ள கட்சியாகும். எனவே, கட்சித் தலைவர்கள் எடுக்கும் முடிவை நாம் ஏற்போம். அதனைப் பாதுகாப்போம். நாடு தற்போது நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் குழம்பிய குட்டைக்குள் மீன்பிடிப்பதற்கு சந்தர்ப்பவாதிகளுக்கு அனுமதி வழங்கமுடியாது. மக்கள் ஆணையைப் பாதுகாப்போம். நாட்டு மக்களுக்காக தீர்மானம் எடுப்போம்- என்றார். (4,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ச குடும்பத்தை பிரிப்பதற்கு முயற்சி

## கோத்தாபய ஆதங்கம்



கொழும்பு, ஜூலை 6
ராஜபக்சக்களின் குடும்பத்தினர் மத்தியில் விரிசல் ஏற்பட்டுள்ளது என்று காண்பிப்பதற்கு, திட்டமிட்ட வகையில் முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனக்கு நெருக்கமான சகாக்களுடனான சந்திப்பின்போது அவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சமூக ஊடகங்கள் மூலமாக இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதமரும், நானும் பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராவதை எதிர்க்கின்றோம் என்று கருத்துக்கள் வெளியாகின்றன. எதிர்கட்சியினருக்கு சாதகமான நிலையை ஏற்படுத்துவதற்காக இவ்வாறான தகவலை பரப்ப முயல்கின்றனர் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-4)

# குடும்ப ஆட்சியை நடத்த ராஜபக்சக்கள் அதிதீவிரம்

## ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூலை 6**
**நாட்டில் ஜனநாயகம் இருப்பதைக் காட்டுவதற்காக, ராஜபக்சக்கள் குடும்ப ஆட்சியை நடத்துவதற்கு மும்மரமாகவுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தேசபக்தி கதைகள் ஊடாக இனவாதங்களைத் தூண்டி அரசியல் பழிவாங்கல் கதைகளைக் கூறும் இந்த அரசின் பொருளாதார முகாமைத்துவ பலவீனம் தொடர்பில் மக்கள் இப்போது விழிப்படைந்துள்ளனர்.

நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க, ஆசனத்தை மாற்றப் பார்க்கின்றனர். தமக்கு முடியாத விடயத்தை மற்றொருவரைக் கொண்டு நடத்த முயல்கின்றனர். இனி குடும்பத்தினர் ஒன்றுசேர்ந்து உண்டு மகிழ்ந்து, குடும்பத்திலிருந்து வேறு யாரைக் கொண்டு வருவது என்று தீர்மானிப்பர். பின்னர் கட்சியின் ஏனைய உறுப்பினர்களிடம் இது தொடர்பில் தெரிவித்து மற்றுமொரு சகோதரரையும் கொண்டுவருமாறு கூறுவர்.

மூன்றில் இரண்டு அதிகாரம் வழங்கி 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றியிருந்தும், இன்னும் இவர்களால் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. எனவே ஆசனத்தை மாற்றினால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா என்பது தொடர்பில் மக்கள் புரிந்து கொண்டுள்ளனர் - என்றார். (ம-4)

# பலமிக்கதொரு கட்சியாக ஐ.தே.கவை மாற்றுவோம்

## பாலித நம்பிக்கை



கொழும்பு, ஜூலை 6
ஏனைய கட்சிகளை விடவும், ஐக்கிய தேசியக் கட்சியை பலமிக்க அரசியல் கட்சியாக கட்டியெழுப்புவோம் என்று கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டை பலவீனப்படுத்தாமல் சகலரும் ஓரிடத்துக்கு வரவேண்டும். கட்சிகளுக்கு திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனவே ஐ.தே.கவுடன் கைகோர்த்துக் கொண்டு பயணிப்பதே உசித்தமானது. திறந்த அழைப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் நினைவுபடுத்துகின்றோம். அதற்காக வெட்கப்பட வேண்டியதில்லை. எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் ஏனைய கட்சிகளை விடவும் ஐக்கிய தேசியக் கட்சியை பலமிக்க அரசியல் கட்சியாக கட்டி யெழுப்பப்புவோம் - என்றார். (ம-4)

# தகுதியுடையவர் ஜனாதிபதியாவர்

## வீணான கருத்து அவசியமற்றது அமைச்சர் நாமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 6
இரண்டாவது தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதி உடைய ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார். எனவே ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பில் ஆராய்வதோ, கருத்துக்களை வெளியிடுவதோ அவசியமற்ற செயல் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகை எதிர்க்கட்சியினரின் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் இது குறித்து கவலைப்பட வேண்டிய தேவையில்லை. வாரிசு அரசியல் அல்லது அரசியலில் முன் அனுமானம் போன்றவை எதிர்காலத்தில் பலன் அளிக்கப்போவதில்லை என்று எப்போதும் கருதுபவன் நான்.

ஆனால் இந்தச் சூழலில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார். இதன் காரணமாக நாங்கள் இந்தத் தருணத்தில் இது குறித்து ஆராய வேண்டிய அவசியமில்லை - என்றார். (ம-4)

# எம்.பியாவதற்கு முன்பு அமைச்சராவார் பஸில்

## முன்னாள் அமைச்சர் எதிர்பார்ப்பு



கொழும்பு, ஜூலை 6
நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம் பெறுவதற்கு முன்னரே, பஸில் ராஜபக்ச அமைச்சராகப் பதவியேற்க வாய்ப்பு உள்ளது என்று முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பஸிலின் நாடாளுமன்ற வருகை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மிக மோசமான நிலை ஏற்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நிலைக்கு முகங்கொடுக்க வேண்டுமாயின், பஸில் அமைச்சராவது அவசியம்.

முச்சக்கர வண்டியில் இருக்கும் மூன்று ரயர்கள் போன்று மஹிந்த, கோத்தா மற்றும் பஸில் ஆகியோர் செயற்படுகின்றனர். ஆனால் தற்போது இரண்டு ரயர்கள் மாத்திரம் இருப்பது முன்னோக்கிச் செல்லத் தடையாக இருக்கின்றது. அதனால் பஸில் நாடாளுமன்றம் செல்ல வேண்டியது அவசியம் - என்றார். (ம-4)

# கோத்தா, மஹிந்தவுக்கு பஸிலின் கடும் உத்தரவு

கொழும்பு, ஜூலை 6
நாடாளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்பதற்கு முன்னர், தனக்கு வழங்கப்படும் அமைச்சுப் பதவி மற்றும் அதன் கீழ் வரும் நிறுவனங்களை வர்த்தமானியில் வெளியிட வேண்டும் என்று பஸில் ராஜபக்ச, ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கு கடும் நிபந்தனை விதித்துள்ளார் என்று கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் மிரிஹான இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இறுதி முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. எனினும் நிதி அமைச்சை பஸில் ராஜபக்சவுக்கு வழங்க நிதி அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்னர் இணக்கம் வெளியிட்டிருந்தபோதும், பின்னர் அது மாற்றமடைந்தது.

இந்த நிலையில் பசில் ராஜபக்சவுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் நிதி இராஜாங்க அமைச்சு வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு, முதலீட்டுச் சபை உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களும் பஸில் ராஜபக்சவின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன.

நாமல் ராஜபக்ச, சமல் ராஜபக்ச மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் அமைச்சுக்களில் இருந்து முக்கிய நிறுவனங்கள் சில பஸில் ராஜபக்சவுக்கு வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளில் ஏற்படும் ஒவ்வாமையும் தவிர்க்கக்கூடிய சில வழிமுறைகளும்!

மருத்துவர் ரம்மியா சிவராஜசுந்தரம்
பயிலுநர் மருத்துவ போசணைப்பிரிவு

ஒவ்வாமை என்பது உடலுக்கு தீங்கு விளைவிக்காத காரணிகளுக்கு எதிராக எமது உடலிலுள்ள நோய் எதிர்ப்பு தொகுதி காண்பிக்கும் எதிர் வினையாகும்.

உலகளாவிய ரீதியில் ஒவ்வாமை ஏற்படுபவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகின்றது. ஒவ்வாமை சம்பந்தமான நோய்களாக அஸ்துமா, தோல் நோய்கள், உணவுகளுக்கு ஏற்படும் ஒவ்வாமை மற்றும் அலேர்ஜிக் ரைனைரிஸ் என்பவை காணப்படுகின்றன. இந்த ஒவ்வாமையை ஏற்படுத்தும் காரணிகள் எமது சுற்றுப்புற சுழலிலும் உணவுப்பொருள்களிலும் காணப்படுகின்றன. பொதுவாக ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவுகளாக நிலக்கடலை, முட்டை, பசுப்பால், கோதுமை சில வகை மீன்கள் இறால் மற்றும் நண்டு போன்றவை அமைகின்றன.

ஒவ்வாமையின் அறிகுறிகளாக ஒருவருக்கு சாதாரண தும்மல், கண்களில் எரிச்சல், கண்ணீர் வடிதல், கண்கள் சிவத்தல், தோலில் அரிப்பு, தோல் சிவத்தல் போன்றவை ஏற்படலாம். ஒவ்வாமையின் தீவிர அறிகுறிகளாக மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் இறப்பு ஏற்படலாம். ஒரு குழந்தையின் பெற்றோர் அல்லது சகோதரர் ஒவ்வாமை நோய் உடையவர்களாக இருப்பின் அந்தக் குழந்தைக்கு ஒவ்வாமை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் மிக அதிகமாகும்.

ஒவ்வாமையானது ஒரு தனிநபருக்கு மாத்திரமன்றி மொத்தக் குடும்பத்துக்கும் உள ரீதியாகவும் பண ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே இந்த ஒவ்வாமை வருமுன் தடுப்பதற்கான வழிவகைகள் பற்றி அறிந்து கொள்ளல் மிக அவசியமானதாகும்.

### கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஒவ்வாமை உணவுகளைத் தவிர்த்தல்

கர்ப்பகாலம் மற்றும் தாய்ப்பாலூட்டும் காலங்களில் தாய் ஒவ்வாமை ஏற்படுத்தக்கூடிய உணவுகளை உட்கொண்டால் குழந்தைக்கு ஒவ்வாமை ஏற்படுமென்று பெரும்பாலானவர்களால் நீண்டகாலமாக நம்பப்படுகின்றது. இதனால் கர்ப்பவதிகளும் பாலூட்டும் தாய்மார்களும் பொதுவாக ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளான பசுப்பால், முட்டை, சிலவகை மீன்கள், இறால், நண்டு, சில வகை மரக்கறிகள் (தக்காளி, கத்தரிக்காய்) மற்றும் சிலவகை பழங்கள் (அன்னாசி, கொய்யா) போன்றவற்றை தவிர்ப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இருப்பினும் உலகின் பல பாகங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் இதனை நிரூபிக்கவில்லை. உண்மையில் சில உணவு வகைகளை தவிர்ப்பதால் (பசுப்பால், முட்டை, மீன்) கர்ப்பிணிகளுக்கு தேவையான போசாக்கு போதியளவில் கிடைக்காமல் பாதிப்படைகின்றனர்.

### தாய்ப் பாலூட்டுதலும் நிரப்பு உணவுகளும்

ஒரு குழந்தைக்கு முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மாத்திரம் கொடுத்தலானது அந்தக் குழந்தைக்கு ஒவ்வாமை ஏற்படுத்தும் வாய்ப்புக்களை குறைக்குமென ஆய்வு முடிவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் தாய்ப்பாலில் நோய் எதிர்ப்புக் காரணிகள் அடங்கியுள்ளதைப் போல் ஒவ்வாமைக்கு எதிராக செயற்படக்கூடிய காரணிகளும் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மாத்திரமும் அதன் பின்னர் இரண்டு வயது வரை உப உணவுகளுடன் சேர்த்து தாய்ப்பாலூட்டுமாறும் உலக சுகாதார நிறுவனம் மற்றும் பல நாடுகளின் சுகாதார நிறவனங்களால் பரிந்துரைசெய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இரண்டு வயதுக்கு குறைந்த குழந்தைகளில் ஏற்படும் தோல் சம்பந்தமான ஒவ்வாமை மற்றும் பசுப்பாலால் ஏற்படும் ஒவ்வாமை குறையும் என ஆய்வு முடிவுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

குழந்தைக்கு ஆறு மாதங்கள் முடிவில் நிரப்பு உணவுகளை வழங்க வேண்டும். தேவை ஏற்படின் நான்காம் மாத முடிவில் நிரப்பு உணவுகளை வழங்க ஆரம்பிக்கலாம். தாய்ப்பாலூட்டலை தொடர்ந்துகொண்டிருக்கும்போதே நிரப்பு உணவுகளை வழங்க ஆரம்பிப்பது ஒவ்வாமை ஏற்படும் சந்தர்ப்பங்களை குறைக்கும் என்பது ஆய்வு முடிவுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. நன்கு மசித்த சோறு, உருளைக்கிழங்கு என்பவற்றிலிருந்து ஆரம்பித்து சிறிது சிறிதாக மரக்கறிகள் பழங்கள், மீன், முட்டை, இறைச்சி என்பவற்றை வழங்கலாம். ஒரு குழந்தைக்கு புதிய உணவுகளை அறிமுகப்படுத்தும்போது ஒரு நேரத்தில் ஒரு புதிய உணவை மட்டுமே வழங்க வேண்டும். மூன்று தொடக்கம் ஐந்து நாள்கள் தொடர்ச்சியாக அவ் உணவை வழங்கிய பின்னரே அடுத்த உணவை ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலம் ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவை இலகுவாக கண்டறிய முடியும். குழந்தைக்கு நிரப்பு உணவுகளை வழங்கும்போது பாகுபாடு இன்றி எல்லா உணவுகள்ளையும் வழங்க முடியும். ஒவ்வாமை ஏற்படுத்தக் கூடிய உணவுகளை தாமதமாக வழங்குவதால் ஒவ்வாமை ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இந்த அறிவுறுத்தல்கள் ஏற்கனவே ஒவ்வாமை நோய் உறுதிப்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கு பொருந்தாது. அவ்வாறான குழந்தைகளுக்கு மருத்துவ நிபுணரின் ஆலோசனைகளை பெறுவதே சிறந்ததாகும்.






> ஒரு குழந்தையின் பெற்றோர் அல்லது சகோதரர் ஒவ்வாமை நோய் உடையவர்களாக இருப்பின் அந்தக் குழந்தைக்கு ஒவ்வாமை ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் மிக அதிகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருத்தந்தைக்கு அறுவைச்சிகிச்சை

உரோம், ஜூலை 6
பெருங்குடல் சுருக்கம் காரணமாக அவதிப்பட்டுவந்த பாப்பரசர் பிரான்ஸிஸ் அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இத்தாலியின் தலைநகர் உரோமில் உள்ள கெமெல்லி மருத்துவமனையில் அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. பாப்பரசர் பிரான்ஸிஸுக்கு எப்போது அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் தெரியவில்லை. எனினும் அறுவைச் சிகிச்சை முடிந்ததும் அது குறித்த தகவல் வெளியிடப்படும் என வத்திக்கான் அறிவித்துள்ளது. (ம)

# விமானம் விபத்து: 29 சிப்பாய்கள் பலி

மணிலா, ஜூலை 6
பிலிப்பைன்ஸ் நாட்டின் மிண்டனாவ் தீவில் இருந்து ஜோலோ தீவுக்கு இராணுவச் சிப்பாய்களை ஏற்றிச் சென்ற விமானம் விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த 29 சிப்பாய்கள் உயிரிழந்தனர். விமானம் தரையிறங்கும்போது ஓடுபாதையைத் தவறாகக் கணித்ததால்தான் இந்த விபத்து சம்பவித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர்களைத் தவிர மேலும் 50 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# கனடாவில் கடும் வெப்பம் 800க்கு மேற்பட்டோர் பலி!



**ஒட்டாவா, ஜூலை 6**
**கனடாவில் தற்போது தற்போது நிலவி வரும் வரலாறு காணாத வெப்பத்தால் அங்கு சுமார் 800க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.**

கனடாவில் சில இடங்களில் 49.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. குறிப்பாக பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில்தான் இந்த பேரிடரின் தாக்கம் அதிகம் உள்ளது. வெப்பம் மட்டுமல்லாமல் வெப்ப அலைகளும் பிரிட்டிஷ் கொலம்பியாவை அதிகம் தாக்கியுள்ளன. இவை இரண்டும்தான் இந்தப் பேரிடருக்கு முக்கிய காரணம் என்று கனேடிய வான்வெளி ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.
வெப்ப அலையையும் கடும் வெப்பத்தையும் சமாளிக்கும் வகையில் வீதிகளிலும் பொது இடங்களிலும் தண்ணீரை விசிறும் கருவிகள் அங்கு பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கருவிகளின் உதவியுடன் மக்கள் தம் உடல் வெப்பநிலையை ஓரளவு பராமரித்து வருகின்றனர். குளங்கள் மற்றும் கடற்பரப்புகள் நோக்கி மக்கள் படையெடுப்பது அங்கு அதிகமாகியுள்ளது.
ஒரு பக்கத்தில் வெப்பநிலையை சமாளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் மறு பக்கத்தில் உயிரிழப்புக்கள் தொடர்ந்துகொண்டுதான் உள்ளன. இதுவரை இந்த அதிகரித்த வெப்பநிலையால் அங்கு சுமார் 800க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். பலரின் நிலை கவலைக்கிடம் என்று சொல்லப்படுகின்றது.
அதேநேரம் இந்த அதிகரித்த வெப்பத்தால் பல இடங்களில் காட்டுத்தீ உருவாகியுள்ளது. மக்களின் குடியிருப்புப் பகுதிகளிலும் தீ இடர்கள் ஏற்பட்டுள்ளன. (ம)



மியான்மரில்

# இராணுவத்துக்கு எதிராக போராட்டங்கள் தீவிரம்!

நைபிட்டோ, ஜூலை 6
மியான்மரில் அந்த நாட்டு இராணுவத்துக்கு எதிராக பொதுமக்கள் நடத்தும் போராட்டம் மிகவும் தீவிரம் பெற்றுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.



மியான்மரில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ராணுவம் கவிழ்த்துவிட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. மேலும் நாட்டின் தலைவர் ஆங் சான் சூச்சி, அதிபர் வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை கைது செய்து வீட்டு காவலில் வைத்துள்ளது. இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், ஆங் சான் சூகிக்கு ஆதரவாகவும் பொதுமக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டத்தை ராணுவம் கொடூரமாக அடக்கி வருகிறது. இதில், ராணுவ ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிக்குழுவினர் மட்டுமின்றி பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர்.
இந்த நிலையில், மத்திய மியான்மரில் ராணுவத்துக்கு எதிரான மோதல் தீவிரமடைந்துள்ளது.
சில பகுதிகளில் ராணுவத்திற்கு எதிராக மக்களே ஒன்று சேர்ந்து பாதுகாப்பு படைகளை உருவாக்கி உள்ளனர் என்று மியன்மார் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)





# அகதிகள் படகு கவிழ்ந்து 43 பேர் பரிதாபச் சாவு!

துனிஸ், ஜூலை 6
துனிசியாவில் இருந்து அகதிகளுடன் புறப்பட்ட படகொன்று கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த 43 பேர் உயிரிழந்தனர்.
துனிசியா நாட்டின் எல்லையையொட்டி அமைந்துள்ள ஸ்வாரா நகரிலிருந்து பெண்கள், சிறுவர்கள் உள்பட சுமார் 130 அகதிகள் படகு ஒன்றில் ஐரோப்பா நோக்கி புறப்பட்டனர். இந்த படகு துனிசியாவின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள ஷார்ஷிஸ் நகருக்கு அருகே சென்று கொண்டிருந்தபோது கடலில் கவிழ்ந்தது.
இதையடுத்து துனிசிய கடலோர காவல் படைக்கு தகவல் கொடுக்கப்பட்டு மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. 43 பேர் உயிரிழந்தனர். ஏனையோர் மீட்கப்பட்டனர். இதை ஒரு மனிதக் கடத்தல் நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ள துனிசியா அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான உற்பத்தியை ஊக்குவிக்கிறது அரசு!

ஐ.ம.சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 6**

**கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, மதுபானத்தை உற்பத்திசெய்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**



இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவிக்கையில்,

அரசின் பல அமைச்சர்கள் கொரோனாத் தடுப்பூசி குறித்த பல அறிக்கைகளை வெளியிட்டனர். அரசு கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தைத் தயாரிக்கவுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர். எனினும் தடுப்பூசிகளை உற்பத்திசெய்வதற்கு பதில், மதுபான உற்பத்தியை ஊக்குவித்துள்ளது அரசு. டொலர் நெருக்கடியால் இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய முடியாத நிலையில் அரசு உள்ளது. தற்போது வருமானத்துக்காக மாற்றுவழிகளைத் தேடுகின்றது- என்றார். (4)

## கறுப்புப் பணத்தை வெளிப்படுத்த சட்டம்

கொழும்பு,ஜூலை 6

கறுப்புப் பணத்தை வெளியேகொண்டுவர புதிய சட்டம் தயாரிக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டம் ஒரு வீத வட்டி என்ற அடிப்படையில் கொண்டுவரப்படவுள்ளது.

இதுவரை முதலீட்டுக்குப் பயன்படுத்தப்படாத மற்றும் மறைத்து வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை இலங்கையில் முதலீடு செய்யவே இந்தப் புதிய சட்டத்தைக் கொண்டுவரவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## இணையம் மூலம் சிறுமி விற்பனை இதுவரை 32 பேர் கைது

கொழும்பு, ஜூலை 6

கல்கிஸை பகுதியில் 15 வயதான சிறுமியை இணையத்தளம் மூலம் பாலியல் நடவடிக்கைக்கு விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 32 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இவர்களில் மாலைதீவு பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்காக அறை ஒன்றை வழங்கியிருந்த ஹொட்டல் ஒன்றின் முகாமையாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சிறுமியின் தாயார் மற்றும் இணையம் மூலம் பல்வேறு நபர்களுக்கு சிறுமியை விற்பனை செய்த பிரதான சந்தேகநபரும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## சிறுமி விற்பனை: 300 பேர் தொடர்பு

கொழும்பு, ஜூலை 6

கல்கிஸை பகுதியிலிருந்து 15 வயதான சிறுமியை இணையத்தளம் மூலம் பாலியல் நடவடிக்கைகளுக்கு விற்பனைசெய்த சம்பவத்துடன் 300 பேர் தொடர்புபட்டுள்ளனர் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரான பேராசிரியர் முதித்த வித்தியாபத்திரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)



## 100 மில்லி மீற்றர் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூலை 6

நாட்டில் சில மாகாணங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்மேற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் மழை நிலைமை அடுத்த சில நாள்களில் சற்று அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும், அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம-4)



## மூலிகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு

துறைசார்ந்தோருக்கு பாதிப்பு

கொழும்பு, ஜூலை 6

இலங்கையின் பாரம்பரிய வைத்தியத் துறையான ஆயுள்வேத வைத்தியத்துக்கு அவசியமான மூலிகைகள், இலைகள் மற்றும் செடிகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாமல், துறை சார்ந்தோர் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் ஆயுள்வேத சிகிச்சை பெறுவோர் மற்றும் திடீர் விபத்துக்களால் எலும்பு முறிவு மற்றும் விஷ ஜந்துக் கடிகளால் ஏற்படும் ஆபத்து ஆகிய சிகிச்சைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் ஆயுள்வேத தொழிலுக்கு அவசியமான மூலிகை மரங்கள் மற்றும் செடிகள் ஆகியவை பரவலாக அழிக்கப்படுகின்றன. இதனால் ஆயுள்வேத வைத்திய முறை முற்றாக அழிந்து விடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று துறை சார்ந்தோர் கவலை தெரிவித்துள்ளனர். (4)

## ஆள்பதிவுத் திணைக்கள சேவைகள் மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 6

ஆள்பதிவுத் திணைக்களத்தில், பொதுமக்களுக்கான சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் முற்பதிவு செய்த குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மட்டுமே திணைக்களங்களுக்குச் செல்ல முடியும். தேசிய அடையாள அட்டைகளைப் பெறும் நோக்கத்துக்காக ஏற்கனவே முற்பதிவு செய்தவர்கள் அலுவலகத்துக்கு வருவதற்கு முன் ஒரு திகதியையும், இலக்கத்தையும் ஒதுக்குவது கட்டாயமாகும்.

முன்பதிவு செய்ய விரும்புவோர் பத்தரமுல்ல பிரதான அலுவலகம் (0115226126 அல்லது 0115226100), வடமேல் மாகாணம் (037 2224337), வடமாகாணம் (024 2227201), தென் மாகாணம் (091 2228348), கிழக்கு மாகாணம் (065 2229449) ஆகிய உப அலுவலகங்களை தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4)




## இலங்கை விமான நிலைங்களுக்கு சர்வதேச ரீதியில் கிடைத்த மதிப்பு

கொழும்பு, ஜூலை 6

உலகின் ஆரோக்கியமான 600 விமான நிலையங்களாக, இலங்கையில் இரண்டு விமான நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்கள் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் டீ.வி.சானக தெரிவித்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள 17 ஆயிரம் விமான நிலையங்களில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இலங்கை விமான நிலையங்களுக்கும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. பயணிகளின் பாதுகாப்பு மற்றும் சேவையாளர்களின் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கிடைத்துள்ள இந்த நன்மதிப்பு, எதிர்காலத்தில் மிகவும் பயன் மிக்கதாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினேழாம் ஆண்டு நினைவஞ்சலி — இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு.
**செல்லையா தியாகராஜா**
(மதுவரி திணைக்கள ஆணையாளர்)



திருமதி
**தியாகராஜா சீதாதேவி**

ஆண்டுகள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு நீங்காது
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

குடும்பத்தினர்.

## DEWMAS JOB BANK

வேலையாட்கள் தேவையா? 074 138 3368
யாழ் வேலை வாய்ப்புகளுக்கு dewmasweb.com
51, Amman Road, Nallur

## வாடகைக்கு

ஆரியங்குளம் சந்தியில் இருந்து 50m உட்புறமாக வீட்டுடன் கடையும் வாடகைக்குண்டு.

தொடர்பு 077 507 5487

## வேலையாள் தேவை

நோயற்ற ஆரோக்கியமான வயோதிபப் பெண்மணியைப் பார்ப்பதற்கு ஆள் தேவை (முழுநேரம்)

தொடர்பு 077276 5413

## பெண் வேலையாள் தேவை

கேக் ஐசிங் மற்றும் கேக் தயாரிக்கக்கூடிய பெண் வேலையாள் தேவை. ( நல்லூர், திருநெல்வேலி மற்றும் யாழ்ப்பாணம் )

தொடர்புகட்கு : 077 635 4224

## தவறவிடப்பட்டுள்ளது

திருநெல்வேலி சந்திக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் காசோலைகளும், கணக்கறிக்கைகளும் அடங்கிய கோப்பு தவறவிடப்பட்டுள்ளது. அதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு 077 472 0413

## அக்கிராசனின்...

அதனால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

13ஆம் நூற்றாண்டில் அக்கராயன் பிரதேசத்தை ஆட்சிசெய்த அக்கிராசன் என்ற குறுநில மன்னனுக்கு 2018 ஆம் ஆண்டு ஜூலை 05ஆம் திகதி சிலை திறந்துவைக்கப்பட்டது. சிலை திறக்கப்பட்ட நாளில் மன்னனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில், கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் கிராமத்து மக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இந்தநிலையில், குறித்த நிகழ்வில் மலர்மாலையை படைத்தரப்பினர் பறித்து பிய்த்து எறிந்தனர். மலர்மாலையை பாதுகாக்க ஏற்பாட்டுக்குழுவினர் முயன்றபோதும், அது பயனளிக்கவில்லை. விடுதலைப்புலிகளின் கரும்புலிகளின் நினைவு நாள் (நேற்று) என்பதால் நினைவஞ்சலி செலுத்தவேண்டாம் என்று பொலிஸார் உட்பட்ட படைத்தரப்பினர் கூறியதோடு நிகழ்வை நடத்தவும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். எனினும், இது விடுதலைப் புலிகளின் நினைவஞ்சலி அல்ல என்று கூறி மன்னனுக்கு அஞ்சலி செலுத்த முற்பட்டபோது, படைத்தரப்பினர் மேற்கண்டவாறு நடந்துகொண்டு மலர்மாலையை பிய்த்து எறிந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. அக்கிராசன் மன்னன், கிளிநொச்சியின் அக்கராயன் பிரதேசத்தை ஆட்சி செய்துள்ளார், அக்கராயன் குளத்தையும் கட்டுவித்துள்ளார் என்றும், இவரது பெயரால் அழைக்கப்பட்ட இந்தப் பிரதேசம் பெயர் மருவி தற்போது அக்கராயன் என அழைக்கப்படுகின்றது என்றும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். (து-6, 316)

## பெறுகை அறிவித்தல்
## சபைநிதி வேலைத்திட்டம் - 2021
## நகராட்சி மன்றம் - சாவகச்சேரி

1. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், **கேள்வி ஆவணம் பகுதி** 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) **கேள்வி ஆவணம் பகுதி** 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2021.07.06 ஆம் திகதியிலிருந்து 2021.07.20 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணமொன்றை தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் 2021.07.06 ஆம் திகதியிலிருந்து 2021.07.20 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் 14.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து கோரப்படும் ஆவணங்களுடன் தனித்தனியாக இரு உறைகளில் இட்டு தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 2021.07.20 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2021.09.07) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.
10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2021.07.14 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.
11. கலந்துகொள்ளும் நபர்கள் நாட்டில் காணப்படும் அசாதாரண சூழ்நிலையை கருத்தில்கொண்டு உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(3)2/ CF/09/2021 | நுணாவில் கல்வயல் வீதி இடதுபக்க 01 ஆம் ஒழுங்கை புனரமைத்தல், நுணாவில் கிழக்கு | 0.686 | 02 மாதம் | C9/C8 | 6,900.00 | 2021.10.04 |
| 02 | NP/14/41(3)2/ CF/10/2021 | கடற்கரை 03 ஆம் ஒழுங்கை புனரமைத்தல், கோவிற்குடியிருப்பு. | 0.840 | 02 மாதம் | C9/C8 | 8,400.00 | 2021.10.04 |
| 03 | NP/14/41(3)2/ CF/11/2021 | கடற்கரை 04 ஆம், 05ஆம் ஒழுங்கைகள் புனரமைத்தல், கோவிற்குடியிருப்பு. | 0.840 | 02 மாதம் | C9/C8 | 8,400.00 | 2021.10.04 |
| 04 | NP/14/41(3)2/ CF/12/2021 | பொன்னர் வீதி இல-01, இல-02 புனரமைத்தல் (கட்டம்-02), மீசாலை மேற்கு. | 0.840 | 02 மாதம் | C9/C8 | 8,500.00 | 2021.10.04 |
| 05 | NP/14/41(3)2/ CF/13/2021 | பெரிய அரசடி வீதி வலதுபக்க 02ஆம் ஒழுங்கை புனரமைத்தல், சாவகச்சேரி வடக்கு. | 0.840 | 02 மாதம் | C9/C8 | 8,500.00 | 2021.10.04 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**
**2021.07.06**

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



**சபாரத்தினம் தெட்சணாமூர்த்தி**
( நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய தர்மகர்த்தா )

(03.06.2021) சனிக்கிழமை அன்று இறைபதம் எய்திய நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் தர்மகர்த்தா திரு. சபாரத்தினம் தெட்சணாமூர்த்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலயம்

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 10 10 1948



மறைவு 05 07 2021


**திரு.சொக்கநாதன் யோகநாதன்**

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் (CFCD) நிறைவேற்றுப்பணிப்பாளராகவும் நீண்ட நெடுநாள் சமூக செயற்பாட்டாளராகவும், அரசசார்பற்ற நிறுவனங்களின் மூத்தபணியாளராகவும் மக்களின் பணிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றிய திரு.சொக்கநாதன் யோகநாதன் (நாதன்) அவர்களின் பிரிவால் துயரும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

பணிப்பாளர் சபையும், பணியாளர்களும்
சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் (CFCD)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் சேவைபுரியும்

**டாக்டர் உமா யோகநாதன் வைகுந்தன்**

அவர்களின் பாசமிகு தந்தையும் **டாக்டர் வைகுந்தன் ஞானலிங்கம்**

அவர்களின் அன்பு மாமனாரும் ஆன

# சொக்கநாதன் யோகநாதன்

அவர்களின் மறைவை எண்ணி மனம் வருந்தும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எம்முடைய ஆழ்ந்த இரங்கல்களையும் தகப்பனாரின் ஆத்ம சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால்துயருறும்**

**INTERNATIONAL DENTAL CARE**

Professional Dental Centre in Sri Lanka

IDC

**Family**

**யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 12.08.1925 — விண்ணில் 18.06.2020

## அமரர் கந்தையா கதிரவேலு

(பவளம்)

திதி : துவாதசி

ஓராண்டு ஓடி மறைந்தாலும் தந்தையே
தீராத துயரோடு தேடுகின்றோம் உங்களையாம்
சீராக எமை வளர்த்து சிறப்போடு வாழ வைத்தீர்
பாரினிலே உங்களை என்றென்றும் மறவோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

91, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்



# பெடரர் முன்னேற்றம்

லண்டன், ஜூலை 6

விம்பிள்டன் பகிரங்கத் தொடரில் 16 வீரர்கள் கொண்ட சுற்றுக்குத் தகுதி பெற்றார் சுவிற்சர்லாந்தின் நட்சத்திர வீரர் பெடரர். 16 சுற்றுக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் பெடரரை எதிர்த்து நோர்ரி மோதினார். 6:4, 6:4, 5:7, 6:4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று முன்னேற்றம் கண்டார் பெடரர். (ம)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 • 10 • 1946



உதிர்வு 17 • 07 • 2020

## அமரர் குமாரசாமி கிருஷ்ணசாமி (புத்தர்)

திதி: தேய்பிறை துவாதசி (07.07.2021)


ஆண்டு ஒன்று சென்றுவிட்டதப்பா
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் நெஞ்சை விட்டகலாது.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 • 01 • 1992



மறைவு 29 • 06 • 2019

## ஸ்ரீஸ்கந்தராசா ஜெயரூபன்

திதி . துவாதசி (06.07.2021)

ஆண்டிரண்டு ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
மாறாத நினைவுகளாய்
மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம்
என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே.!
ஆண்டவன் அடியில் சாந்தி பெறுங்கள்.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 • 10 • 1948



மறைவு 05 • 07 • 2021

## சொக்கநாதன் யோகநாதன் (நாதன்)

(சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய நிறைவேற்றுப்பணிப்பாளர் CFCD)

தெல்லிபழையைப் பிறப்பிடமாகவும் பிரம்படிலேன் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கநாதன் யோகநாதன் நேற்று (05.07.2021) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கநாதன் மற்றும் பவளம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு இந்திராணி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமலரின் அன்புக் கணவரும், உமா (Dental Surgeon International Dental Care Pvt Ltd) காலஞ்சென்ற நித்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், வைகுந்தனின் (Dental Surgeon D.H பண்டத்தரிப்பு) மாமனாரும், அயனின் பாசமிகு பேரனும், யுவதி, யோகாம்பாள் (Swiss) யோகேஸ்வரன் (Retired Officer BOC, Canada), கணேஸ்வரன் (Canada), யோகேஸ்வரி, காலஞ்சென்ற கணேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், திரு.திருமதி பத்மநாதன் புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நேற்று (05.07.2021) நடைபெற்றது. இத் தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரம்படி லேன், கொக்குவில்.
தொ.பே.இல: 077 918 5730

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தலைவர் பிரபாகரன் வெற்றிகரமான இராணுவ தலைவர்

## எரிக்சொல்ஹெய்ம் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 6

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் வெற்றிகரமான இராணுவ தலைவர். ஆனால் வெற்றிகரமான அரசியல் தலைவரில்லை என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, ஊடகம் ஒன்றுடன் மேற்கொண்ட டுவிட்டர் உரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"1998 இல் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகளில் மூன்றாம் தரப்பாக செயற்படுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயை அணுகினார். ஏனைய நாடுகள் குறித்தும் அவர்கள் ஆராய்ந்தனர்.

எனினும், நோர்வே தொலைதூர நாடாகக் காணப்பட்டதாலும் இலங்கை குறித்து தனிப்பட்ட நலன்கள் இல்லாததன் காரணமாகவும் இரு தரப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக காணப்பட்டதாலும் அவர்கள் நோர்வேயை தெரிவுசெய்தனர். நோர்வே என்பது இந்தியாவுக்கும் இலங்கை விவகாரங்களில் தொடர்புபட்டிருந்த முக்கிய வெளிநாடுகளுக்கும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நாடாக காணப்பட்டது." என்று குறிப்பிட்டுள்ளார். (த-இ)

# ரிஷாத் மீதான மனுவிலிருந்து நான்காவது நீதியரசரும் விலகல்

கொழும்பு, ஜூலை 6

முன்னாள் அமைச்சரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் மீதான மனுக்களிலிருந்து நான்காவது நீதியரசரும் நேற்று விலகினார்.

கைதுசெய்யப்பட்டு தடுப்பிலுள்ள அந்த இருவரும், தம்மை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்து சி.ஐ.டி.யினர் தடுத்து வைத்துள்ளமையை ஆட்சேபித்து தலா 500 கோடி ரூபா இழப்பீடு பெற்றுத்தரக்கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுக்கள் மீதான பரிசீலனைகளிலிருந்து உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஒவ்வொருவராக விலகி வருகின்றனர்.

அதன்படி இந்த மனு மீதான விசாரணையிலிந்து 4ஆவது நீதியரசரான மஹிந்த சமயவர்தனவும் விலகுகின்றேன் என்று மன்றில் நேற்று அறிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நீதியரசர்களான யசந்த கோடாகொட, ஜானக டீ சில்வா மற்றும் ஏ.எச்.எம்.டீ. நவாஸ் ஆகியோர் இந்த மனுக்கள் மீதான பரிசீலனையிலிருந்து விலகிக் கொண்டிருந்தனர்.

இந்தநிலையில், குறித்த மனுக்களை அவசர நிலை மனுக்களாக கருதி நாளைமறுதினம் வேறு ஒரு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மீள பரிசீலனைக்கு எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (த-22)

# சாரணர் கலாசார ஜம்போரி சர்வதேசத்துக்கு அறிமுகம்

கொழும்பு, ஜூலை 6

உலக சாரணர் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை சாரணர் சங்கம் ஏற்பாடு செய்யும் 'உலகளாவிய சாரணர் கலாசார ஜம்போரி' சர்வதேசத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் காணொளி தொழில்நுட்பம் ஊடாக கடந்த சனிக்கிழமை நிகழ்வு இடம்பெற்றது.

உலகளாவிய சாரணர் கலாசார ஜம்போரி நிகழ்வு எதிர்வரும் 16, 17 மற்றும் 18ஆம் திகதிகளில் மெய்நிகர் தொழில்நுட்பம் ஊடாக இடம்பெறும்.

உலகில் சாரணர் இயக்கம் காணப்படும் 172 நாடுகளில் 110 நாடுகள் இதுவரை இந்த ஜம்போரிக்காக பதிவு செய்துள்ளன. அந்தந்த நாடுகளின் தனித்துவமான கலாசார விழுமியங்களின் கூறுகள் (உணவு, உடை, கலாசாரம் மற்றும் நடனம்) இதில் உள்ளடக்கப்படும். நிகழ்வில், இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமை சாரணர் ஆணையாளர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ், பிரதி தலைமை ஆணையாளர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்னாண்டோ, ஏற்பாட்டுக் குழுத்தலைவர் பிரபாத் குலரத்ன மற்றும் தலைமையக ஆணையாளர் மருத்துவர் அசங்க எரியாவ ஆகியோர் கலந்து கொண்டனர். (4)

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

## அரச தரப்பை...

யும் கொடுக்கத்தயாராக இருக்கின்றோம். என்றவாறு வலியுறுத்தியுள்ளார், ரெலோவின் தலைவரும் வன்னித்தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சித் தலைவர்களுக்கிடையிலான மற்றொரு சந்திப்பு யாழ்ப்பாணத்தில் ரெலோவின் அலுவலகத்தில் நேற்றுமாலை நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது இனத்தை அழிக்க நினைக்கின்ற அரசுக்கு நாம் ஒரு பலமான சக்தியாக அமைய வேண்டும் என்ற நோக்கத்திலே தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். இரண்டாவது முறையில் நாங்கள் விடுபட்ட தரப்புகளுக்கும் அழைப்பிதழ் கொடுத்து இருந்தோம். அதில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கலந்துகொண்டார். அவருக்கு நன்றி சொல்லவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, சித்தார்த்தன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். ஏனையவர்கள் கலந்துகொள்ளவில்லை.

### கூட்டான பலமான அமைப்பு

இந்தவாரம் நாடாளுமன்றம் கூடியபின்னர், அடுத்தகட்டமாக மீண்டும் ஒரு கூட்டான பலமான அமைப்பாக செயற்படுவது என்று முடிவு எடுத்திருக்கின்றோம். அதன்பிரகாரம் அடுத்துவரும் நாள்களிலேயே நாங்கள் அழைக்கவிரும்பிய தலைவர்களோடு பேசி இறுதியாக ஒரு குடையின்கீழ் ஒரே கூட்டாக செயற்படுவதற்கான ஒரு முடிவை நாங்கள் எடுக்க இருக்கின்றோம்.

எல்லோரையும் அரவணைத்துப்போகவேண்டும் என்பது தான் எங்களுடைய பிரதான நோக்கம். அந்தவகையில், மீண்டும் கட்சித் தலைவர்களிடம் நேரேசென்று அவர்களுடன்பேசி அவர்களை இந்த பலமான ஒற்றுமைக்குள் கொண்டுவருவதற்கான வாய்ப்பை நாங்கள் கொண்டுவருவோம். நாங்கள் சி.வி.விக்னேஸ்வரன் தரப்புக்கும் அழைப்பு விடுத்திருந்தோம். விக்னேஸ்வரன் மற்றும் அவருடன் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளுக்கும் நாங்கள் அழைப்பு விடுத்திருந்தோம். அந்தவகையில் நாங்கள் மீண்டும் அவர்களைச் சந்திக்க இருக்கின்றோம், ஒற்றுமை தொடர்பில் பலமான கூட்டாக செயற்படுவதற்கான முயற்சியை நாங்கள் மேற்கொள்வோம். அவர்களும் அதற்கு விரும்புவார்கள்.

### புலம்பெயரிகளை இணைத்தல் வேண்டும்

சர்வதேசத்தில் எங்களுக்கு சார்பாக பல நாடுகள் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. அந்தவகையிலே இந்த ஒற்றுமை பலம் சேர்க்கும் வகையில் அமையும். புலம்பெயர்ந்த உறவுகளை இணைத்து இந்தியாவிலேயே உள்ள தமிழ்நாட்டு தமிழர்களை இணைத்து இதனை நாங்கள் பலமான சக்தியாக காட்டவேண்டும். அது காலத்தின் கட்டாயம்.

### பிரச்சினைகளை பேசித் தீர்க்கவேண்டும்

புளொட் மற்றும் ரெலோவுக்கு நாடாளுமன்றில் நேரம் ஒதுக்குவது சம்பந்தமாக கருத்துச்சொல்ல விரும்பவில்லை என்று தெரிவித்திருந்தீர்கள். அதேநிலையில்தான் தற்போதும் உள்ளீர்களா என்று கேட்டபோது, ஒற்றுமைக்காக நாங்கள் சில விஷயங்களை தவிர்த்து வருகிறோம். இந்த விடயங்கள் சம்பந்தமாக மக்கள் மத்தியிலே சில கேள்விகள் ஏற்படுகின்றன.

பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால், ஒற்றுமையாக இருக்கின்றோம். இந்த பலம் நீடிக்கவேண்டும். பிரச்சினை இருக்கின்றது. ஆனால் பேசித் தீர்க்கவேண்டும். பேசித் தீர்க்கலாம் என்ற வகையிலே ஒற்றுமை என்பது மிக முக்கியம். பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். அதனைத் தீர்க்காத பட்சத்தில் முடிவுகளை எட்டவேண்டும்.

ஆண்டவர் காப்பாற்ற வேண்டும் என்று ஆண்டவர் மேல் பழியை போட்டுவிட்டு இருக்கமுடியாது. ஒவ்வோர் அங்குலமாக எங்களுடைய நிலங்கள் பறிபோய்கொண்டிருக்கின்றன. இலங்கை அரசின் திட்டமிட்ட செயற்பாடுகள் எங்கள் தேசத்தில் மிகத் துல்லியமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனை முறியடிப்பதற்கு அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்பதுதான் காலத்தின் கட்டாயம்,

### இழப்பீடு வேண்டும்

கப்பல் தாழ்ந்ததன் பின்னர், எங்களுடைய கடற்பரப்பிலேயே மிகமோசமான செயற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆமைகள், திமிங்கிலங்கள் உயிரிழந்து கரையொதுங்குகின்றன. மீனவ சமூகம் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுவருகின்றது. அவை தவிர்க்கப்பட வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் பல கோடி ரூபாவை மீனவ சமூகத்துக்கு வழங்கமுன்வந்துள்ளது. அந்தக் கொடுப்பனவு தனிப்பட்ட சிங்கள மீனவர் சமூகத்துக்கு மாத்திரம் சென்றடையக்கூடாது. கொடுப்பனவு விடயத்தில், கடற்றொழில் அமைச்சராக இருக்கின்ற டக்ளஸ் தேவானந்தாவும் கவனமெடுத்துச் செயற்பட வேண்டும் என்றார். (த-20,26)

# சாரா இல்லையென்றால் என் கணவரை விடுவிக்குக

## அவரது மனைவி கோரிக்கை

கொழும்பு, ஜூலை 6

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுடன் தொடர்புபட்ட சாரா என்பவர் உயிருடன் இல்லையென ஊடகங்கள் வாயிலாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். எனவே சாரா இந்தியாவுக்கு தப்பி ஓட உதவி செய்தார் என்று குற்றம்சாட்டப்பட்டு சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட தனது கணவரான தேவகுமாரை விடுவிக்குமாறு அவரது மனைவியான டிலோஜினி கோரிக்கை விடுத்துள்ளார். மட்டக்களப்பு மாங்காடு பகுதியிலுள்ள அவரது வீட்டில் நேற்றுமுன்தினம் அவர் ஊடக மாநாடு நடத்தி இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

"எனது கணவரான தேவகுமார் , சாரா என்ற புலத்தினி இந்தியாவுக்கு தப்பிச்செல்ல உதவி செய்தார் என்ற சந்தேகத்தில் சி.ஐ.டி யினரால் கடந்த ஜூலை மாதம் 11ஆம் திகதி வீட்டில்வைத்து கைதுசெய்யப்பட்டார்.

ஆனால், எனது கணவர்மீது சாட்டப்பட்ட குற்றம் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தநிலையில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், சாரா என்பவர் உயிருடன் இல்லையென ஊடகங்கள் வாயிலாக தெரிவித்துள்ளார். அப்படி இருக்கும்போது எனது கணவர் செல்வராசா தேவகுமார், சாராவை இந்தியாவுக்கு தப்பி ஓட உதவி செய்தது என்பது எப்படி சாத்தியமாகும்? சாரா உயிருடன் இல்லை என்றால் தப்பிக்க எப்படி உதவி செய்திருக்கமுடியும்? எனவே, எனது கணவர் நிரபராதி. எனது பிள்ளைகளின் எதிர்காலம் கருதி எனது கணவரை விடுவித்துத் தருமாறு அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுக்கின்றேன். என்று கோரியுள்ளார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேகமாக....

இவ்வாறு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளரும் மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்தளவில் பதிவாகின்றமையைப்போன்று தரவுகள் வெளிப்பட்டாலும், நாட்டில் அச்சுறுத்தல் நிலைமையை இன்னமும் நாம் கடக்கவில்லை.
'டெல்டா' வைரஸ் பரவலின் பெரும் அச்சுறுத்தல் நிலை நாட்டில் காணப்படுவதை எவரும் மறுக்க முடியாது.
சமூகப் பரவலாக இது மாறியுள்ளதா? என்பதைக் கண்டறியும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன் ஆய்வுகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் குறித்து மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்கள்.
இதேவேளை, 'டெல்டா' வைரஸ் பரவல் குறித்த அதிக தரவுகள் எமக்குக் கிடைத்துள்ளன. நாடு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஒன்றில் உள்ளது என்பதையே எம்மால் மீண்டும் தெரிவிக்க முடியும்.
நாட்டை முடக்குவதா அல்லது நாட்டை திறப்பதா என்பது குறித்து அரசு, கொரோனா செயலணிக் கூட்டத்தில் தீர்மானம் எடுப்பதெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், சுகாதாரத் தரப்பாக எம்மால் கூற முடிந்தது ஒன்றுதான், மக்கள் தத்தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே தற்போதுள்ள பரவலை கட்டுப்படுத்த இருக்கும் ஒரே வழிமுறையாகும்.
அதேபோல், மேல் மாகாணம் அச்சுறுத்தல் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.
எனவே, மேல் மாகாணத்திலிருந்து மக்கள் வைரஸை வேறு பகுதிகளுக்கு காவிச் செல்லாத விதத்தில் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்" என்றார். (த-22)

### ஒன்லைனில்...

ணப்பங்கள் இணையவழியில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நேற்றுத் தொடக்கம் இவ்வாறு விண்ணப்பிக்கும் நடைமுறை செயற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் 30ஆம் திகதிவரை இணைய வழியாக விண்ணப்பிக்க முடியும், இணைய வழியாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் என்று திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.
இதேவேளை, உயர்தரப்பரீட்சையை , ஒக்ரோபர் 04ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

### சாவு...

னாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 236 ஆக உயர்வடைந்துள்ளது.
நேற்றுமுன்தினம் சாவடைந்த 32 பேரில் 18 பெண்களும், 14 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். அதன்படி 30 வயதுக்குட்பட்ட ஆண் ஒருவரும், 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 5 பெண்களும், 5 ஆண்களும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 13 பெண்களும், 8 ஆண்களும் சாவடைந்துள்ளனர் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.
இதேவேளை,
நாட்டில் நேற்று 816 பேர் மாத்திரம் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 66 ஆயிரத்து 446 ஆக அதிகரித்துள்ளது.
நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியம் மேற்கொண்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் வரத் தாமதிக்கின்றன என்றும் இராணுவத் தளபதி நேற்றிரவு குறிப்பிட்டார். இதனால் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

### 9,462....

னர் என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இரண்டாம் கட்ட கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது.
எதிர்வரும் 10ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ள தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்துக்காக 50 ஆயிரம் 'சைனோபோர்ம்'தடுப்பூசிகள் கிடைத்துள்ளன.
60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் முன்களப்பணியாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.
யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக 49 ஆயிரத்து 602 பேருக்கு கொரோனாத் தொற்று நோய்க்கு எதிரான தடுப்பூசி வழங்கப்பட்டது. இவர்களுக்கான இரண்டாவது தடுப்பு மருந்தேற்றும் பணிகள் கடந்த ஜுன் 28ஆம் திகதி முதல் கடந்த3ஆம் திகதி வரை இடம் பெற்றன.
இதில் 46 ஆயிரத்து 648 பேர் இரண்டாவது தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

### அரச மருத்துவ...

ரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
தேசிய தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்துக்கு இலங்கை இராணுவம் இடையூறு விளைவிக்கின்றது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.
குறித்த கடிதத்தில் இராணுவத்தினர் அனுமதிக்க முடியாத தலையீடுகளை மேற்கொள்கின்றனர் என்றும் மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்துக்குள் அனுமதியின்றி நுழைதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.
இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் அளித்துள்ள இராணுவத் தளபதி,
"ஆடைத்தொழிற்சாலை துறையில் உள்ளவர்கள் சிலருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொண்ட பின்னர் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு அவர்களின் முன்னைய சுகாதார நிலைமைகளே காரணமாகும்.
இதில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிடுவதைப்போல் தடுப்பூசிகளை ஏற்றும் இராணுவத்தினர் மீதான தவறுகள் எவையும் இல்லை.
அரசின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை சாதகமாக முன்னெடுப்பதற்கும் உயிர்கொல்லி வைரஸ் பரவலை இல்லாதொழிக்கும் நோக்கத்திலும் மாத்திரமே இராணுவம் இதில் பங்களிப்பு வழங்கி வருகின்றது.
வேறு விதமான தலையீடுகள், அநாவசியமான இடையூறுகள் மற்றும் வேறு குறுகிய நோக்கங்களை மையப்படுத்தி மேற்படி செயற்பாடுகளில் தலையீடு செய்யவில்லை.
எவ்வாறாயினும், கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதில் இராணுவம் வழங்கிவரும் பங்களிப்புகளை எவ்வித பின்வாங்கலும் இன்றி தொடர்ச்சியாக வழங்கும்.
எதிர்காலத்திலும் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக இராணுவம் செயற்படுவதுடன், எந்த நேரத்திலும் அண்மைய பகுதிகளிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள், மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர்களுடன் கலந்தாலோசித்து கொரோனாத் தடுப்புக்கான பணிகளை பின்வாங்கல் இன்றி முன்னெடுக்கும்" என்றார். (த-22)

### 'கெட் அவுட்'...

சுட்டிக்காட்டியுள்ளனர்.
"பசில் ராஜபக்ச மற்றும் பி.பீ.ஜயசுந்திர ஆகியோரின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே தற்போதைய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் அமைச்சரவை அல்ல. சட்டிமுட்டி, பத்திக் என நகைச்சுவைத்தனமாக இராஜாங்க அமைச்சுகளைக்கூட பசிலே உருவாக்கினார். அவர் நாடாளுமன்றம் வருவதால் மாற்றம் ஏதும் ஏற்படப்போவதில்லை." என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர கருத்து வெளியிட்டிருந்தார்.
இதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கடும் சீற்றத்துடன் பதிலடி கொடுத்துவருகின்றனர்.
இந்தநிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம,
'ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆளுந்தரப்பின் பிரதான பங்காளிக்கட்சி அல்ல. அரசின் தீர்மானங்களை ஏற்கமுடியாவிட்டால் அரசிலிருந்து வெளியேறலாம்.
அரசால் எடுக்கப்படும் தீர்மா னங்களை உள்ளே இருந்து விமர்சிப்பதற்கு உரிமை கிடையாது. எனக்கு ஏதாவது அமைச்சு பதவி கிடைத்தால் அதனை சிறப்பாக செய்யவே முற்படுவேன். வழங்கப்பட்ட அமைச்சை விமர்சிப்பதென்பது கீழ்த்தரமான செயற்பாடாகும்." என்றார்.
அதேவேளை, சுதந்திரக்கட்சியில் உள்ள வேறு நபருக்கு இராஜாங்க அமைச்சு பதவியை வழங்குவதற்கு தயாசிறி ஜயசேகர முன்வரவேண்டும்." -என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா குறிப்பிட்டார். (த-44)

### பஸிலை...

யில் பேச்சு நடத்தத் தீர்மானித்துள்ளோம்." என்று நீர் வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. அந்த முரண்பாடுகள் தற்போது தீவிரமடைந்துள்ளன. கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் வசமுள்ள பதவிகள் திட்டமிட்ட வகையில் பறிக்கப்படுகின்றன. கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவின் அமைச்சின் கீழிருந்த உர நிறுவனம் எந்தவொரு காரணமுமின்றி விவசாயத்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. கூட்டணி அமைத்துள்ளோம் என்பதற்காக தவறை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. பொதுஜனபெரமுனவின் உறுப்பினர்களின் தன்னிச்சையான செயற்பாடுகள் பங்காளிக் கட்சிகளைப் புறக்கணிக்கும் வகையில் காணப்படுகின்றன.
வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் செயற்பட்ட விதம் அடிப்படையற்றது என்றார். (த-22)

### அந்நிய....

காட்டியுள்ளார்.
காணொலி தொழில்நுட்பத்தின் ஊடாக ஊடகங்களுடன் பேசியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
தனியாக சேதன பசளையை மட்டும் பயன்படுத்துவது உற்பத்தியை வரையறுக்கக் கூடும். இரசாயன உர பயன்பாட்டை தடுப்பதற்காக அவற்றுக்கு தடை விதித்து அதனால் ஏற்படும் அரிசி தட்டுப்பாட்டை நீக்க அரசு அரிசியை இறக்குமதி செய்கின்றது.
எனினும், இந்த அரிசிக்கும் இரசாயன உரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. உலகில் 15 வீதமான விவசாய நிலங்களில் மட்டுமே சேதன பசளை பயன்படுத்தப்படுகின்றது- என்றார். (த-இ)

### கடன்....

சாட்டப்பட்டுள்ளது. தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் குறித்த வீட்டிலிருந்த தந்தையும் மகனும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம், கோண்டாவில் காளிகோவிலடியில் நேற்று மதியம் இடம் பெற்றது.
சம்பவத்தில் மோகனராஜா ரஜீவன் (வயது37) என்பவரே படுகாயமடைந்தார். சம்பவத்தையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் தந்தையும் மகனும் கைதுசெய்யப்பட்டனர்.
சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
(த-20.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தான் அளவுக்குக்கூட இலங்கைக் கிரிக்கெட் இல்லை!

## ரணதுங்கவின் கருத்துக்கு சோப்ரா பதிலடி



**கொழும்பு, ஜூலை 6**

**இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணியை, இரண்டாம் தர அணி என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க தெரிவித்திருந்த நிலையில், ஆப்கானிஸ்தான் அளவுக் குக்கூட இலங்கை அணி தற்போது இல்லை என்று தெரிவித்து பதிலடி கொடுத்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரரான ஆகாஷ் சோப்ரா.**

விராட் கோலி தலைமையிலான இந்திய அணி, இங்கிலாந்துக்கு 5 டெஸ்ட் போட்டிகளில் விளையாடச் சென்றுள்ளது. இதையடுத்து, ஷிகர் தவான் தலைமையில், இளம் வீரர்களைக் கொண்ட இந்திய அணி இலங்கைக்குப் பயணம் செய்துள்ளது.

இலங்கையுடன் 3 ஒருநாள், 3 ரி20 போட்டிகளில் ஷிகர் தவான் தலைமையிலான இந்திய அணி விளையாட உள்ளது. இந்த அணியில் ஹர்திக் பாண்டியா, குர்னல் பாண்டியா, சூர்ய குமார் யாதவ், புவனேஷ்வர் குமார், சஹல், குல்தீப் யாதவ், தேவ்தத் படிக்கல், ருத்ராஜ் ஹெய்க்வாட், சேத்தன் சக்காரியா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் சமீபத்தில் கருத்து தெரிவித்த இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க, இலங்கைக்கு இரண்டாம் தர இந்திய அணி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று விமர்சித்தார்.

அவர் அளித்த பேட்டியில், 'இலங்கைக்கு இரண்டாம் தர இந்திய அணி பயணம் மேற்கொண்டுள்ளது. இரண்டாம் தர இந்திய அணி இங்கு வந்துள்ளமை இலங்கை கிரிக்கெட் அணிக்கு அவமானம். அதைத்தவிர வேறு என்ன இதில் இருக்க முடியும்? இந்திய கிரிக்கெட் வாரியம், தங்களின் சிறந்த அணியை இங்கிலாந்து தொடருக்கு அனுப்பிவைத்துவிட்டு, பலவீனமான அணியை இலங்கைக்கு அனுப்பியுள்ளது. இதுபோன்ற செயலுக்கு எங்கள் கிரிக்கெட் சபையைத் குறை கூற வேண்டும்' என விமர்சித்தார்.

இந்நிலையில் அர்ஜுன ரணதுங்கவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்திய அணியின் முன்னாள் வீரரும், வர்ணனையாளருமான ஆகாஷ் சோப்ரா கருத்துத் தெரிவித்துள்ளார். அதில் அவர் கூறியதாவது:

'ரணதுங்க கூறியது முற்றிலும் உண்மைதான். இலங்கைக்குச் சென்றுள்ளது, முழுமையான இந்திய அணி அல்லதான். பும்ரா, விராட் கோலி, ரோஹித் சர்மா, ரவிந்திர ஜடேஜா ஆகியோர் அணியில் இல்லை. ஆனால், இலங்கையில் உள்ள இந்திய அணியைப் பார்த்தால் இரண்டாம்தர அணி போலவா இருக்கிறது?

இந்திய அணியின் உத்தேச 11 வீரர்கள் கொண்ட ஒருநாள் அணியை எடுத்துக்கொண்டால் மொத்தமாக 471 போட்டிகளில் விளையாடியுள்ளது.

இலங்கை அணியை எடுத்துக் கொள்ளுங்கள். இலங்கை அணியில் உள்ள வீரர்கள் அனைவரையும் சேர்த்தால் கூட இத்தனை போட்டிகளில் விளையாடியிருப்பார்களா எனப் பார்க்கலாம். ஒவ்வொரு போட்டியின் அனுபவத்தோடு, அனுபவத்தை ஒப்பிடும்போது தான் உற்சாகமானதாக அமையும். இப்போதுள்ள இலங்கை அணியின் திறன் குறித்து ஏதாவது கூறவேண்டுமா? ரி20 உலகக்கிண்ணப் போட்டியின் தகுதிச்சுற்றில் விளையாடிய வேண்டிய நிலையில்தான் இலங்கை அணி இருக்கிறது. ஆனால், புதிதாக வந்த ஆப்கானிஸ்தான் அணி கூட தகுதிச்சுற்றில் விளையாடவில்லை.

ஆதலால், இலங்கை அணி தன்னைத் தானே உற்றுநோக்க வேண்டும், அது தான் நேர்மையானதாக இருக்கும். இப்போதுள்ள நிலையில் தடுமாற்றம் அடைந்த அணியாக இலங்கை இருப்பதே நிதர்சனம். ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கு இலங்கை அணி தகுதி பெறாத நிலைகூட ஏற்படலாம். ஆனால், ஆப்கானிஸ்தான் இதையெல்லாம் கடந்துவிட்டது என்பது நினைவிருக்கட்டும்' - என்றார். (ம)

**வீடு வாடகைக்கு**

கச்சேரி நல்லூர் வீதியில், சகல வசதிகளுடனும் புதிதாக கட்டப்பட்ட 2 மாடி வீட்டில், மேல் மாடி மட்டும் வாடகைக்கு விடப்படும்.

077 794 7192

**கடை வாடகைக்கு தேவை**

K.K.S வீதியில் வெல்டிங் வேலை செய்வதற்கு பொருத்தமான கடை வாடகைக்கு தேவை.

தொடர்பு : 076 931 2111

**வேலை வாய்ப்பு**

அதிக வருமானத்தை ஈட்டும் தொழில் வாய்ப்பு
தகைமை க.பொ.த சாதாரண தரம் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் வசிப்போர் விரும்பத்தக்கது.

தொடர்பு 076 216 3399

**மோட்டார் சைக்கிள் தேவை**

பெண்கள் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள் தேவை. 3 ஆங்கில இலக்கம் கொண்டது விரும்பத்தக்கது.

தொடர்புகட்கு : 076 654 5987

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதி 1ஆம் ஒழுங்கையில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
2 பரப்பாக பிரித்தும் கொடுக்கப்படும்.
யாழ் நகரிலிருந்து 1 1/2km தூரம்.
(பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)

தொடர்பு : 076 221 2037, 076 734 1023, 077 064 2661

## யூரோ அரையிறுதி இன்று

# இறுதி ஆட்டத்துக்கு செல்வது எந்த அணி?





**உரோம், ஜூலை 6**

யூரோ கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகும் நிலையில் இறுதியாட்டத்துக்கு எந்த அணி செல்லப்போகின்றது என்பதில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது. இன்று நள்ளிரவு 12.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் இத்தாலியை எதிர்த்து ஸ்பெய்ன் மோதவுள்ளது.

இரண்டு அணிகளும் மிகப் பலமான நிலையில் உள்ளதால் இந்த ஆட்டத்தின் மீது எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நாளை நள்ளிரவு 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டென்மார்க்கை எதிர்த்து இங்கிலாந்து மோதவுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.